உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 பங்குனி 20 ஞாயிற்றுக்கிழமை (02-04-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:109

பளைப் பகுதியிலிருந்து பொதுமக்களை வெளியேறுமாறு புலிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.2

பளைப் பிரதேசத்தில் தற்போது யுத்தம் நடைபெற்றுவரும் பகுதியில் இருந்து பொதுமக்கள் உடனடியாக வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லவேண்டும் என்று விடுதலைப்புலிகள் கேட்டுள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஓயாத அலைகள்-3 நடவடிக்கை வடமராட்சியிலும் தென்மராட்சியிலும் உக்கிரமாக நடைபெறுகிறது. ஆகவே தற்போது தாக்குதல்கள் இடம்பெறும் பிரதேசங்களில் இருந்து வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு பொதுமக்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

பளை - கொடிகாமம் வீதி (கண்டி வீதி) கடும் சமர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆபத்தான பாதையாக உள்ளதால் பச்சிலைப்

(14ஆம் பக்கம் பார்க்க)

புத்தூரில் மோதல்!

வலி.கிழக்கு,ஏப்.2

புத்தூர் சந்திக்கு அருகே புன்னாலைக்கட்டுவன் வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலொன்றில் படையினர் தரப்பில் ஒருவர் பலியானதாகவும் ஒருவர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியிலுள்ள தையல்கடை ஒன்றுக்கு சென்ற இனந்தெரியாத இரு இளைஞர்கள் அங்கு தைப்பதற்காக வைக்கப்பட்டிருந்த இரு இராணுவச் சீருடைகளை அபகரித்துச் சென்றுவிட்டனர் என்றும் -

இதனைத் தொடர்ந்தே அங்கு மோதல்கள் இடம்பெற்றதாகவும் கூறப்படுகிறது.

இம்மோதல்களின் பின்னர் அப்பகுதியில் பொதுமக்கள் சிலர் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலில் காயமடைந்த ஏழாலை தெற்கைச் சேர்ந்த தர்மலிங்கம் தவேந்திரன் (வயது33) என்பவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பளையிலிருந்து மக்கள் வெளியேற

படையினர் அனுமதிக்க வேண்டும்!

அப்ப ஏப்ரல் முட்டாள் தினத்தில முட்டாள் தனமாக நடத்திருக்கினம் எண்டு சொல்லுங்கோ...!

ஜனாதிபதியிடம் ஆனந்தசங்கரி அவசர கோரிக்கை

கொழும்பு, ஏப்ரல் 2

பளைப் பிரதேசத்தில் சிக்கியுள்ள 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் அங்கிருந்து பாதுகாப்பாக வெளியேறுவதற்கு அனுமதிக்கப்படவேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவர் வி.ஆனந்தசங்கரி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக பளையிலுள்ள சம்பந்தப்பட்ட படை அதிகாரிகளுக்கு ஜனாதிபதி உத்தரவிடவேண்டும் என்றும் ஆனந்தசங்கரியினால் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ஆனந்தசங்கரியினால் ஜனாதிபதிக்கு அவசர பக்ஸ் ஒன்று நேற்று அனுப்பப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பளைப் பிரதேசத்தில் தற்போது உணவுப் பொருள்கள் மற்றும் மருந்துப்பொருள்கள் என்பவற்றுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவிவருகின்றது. அங்குள்ள மக்கள் வெளியிடங்களுடனான தொடர்புகளை இழந்த நிலையில் இருந்து வருகின்றனர்.

எனவே பொதுமக்கள் பளையிலிருந்து வெளியேறி யாழ்ப்பாணம் செல்வதற்கு படையினர் அனுமதி அளிக்க வேண்டும். இதற்கான உடனடி உத்தரவை தாங்கள் படையினருக்குப் பிறப்பிக்கவேண்டும்.

பொதுமக்கள் பளையில் இருந்து வெளியேறுவதற்கு புலோப்பளை, அல்லிப்பளை, கிளாலி, கச்சாய் ஊடான பாதையைப் பயன்படுத்துவதற்கும் படையினர் அனுமதி அளிக்க வேண்டும்.

இப்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-6)

பளை ஆஸ்பத்திரியில் ஒருவர் பலி

யாழ்ப்பாணம்,ஏப்.2

பளை ஆஸ்பத்திரி சுற்றாடலில் நேற்று முன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் போது ஆஸ்பத்திரி சைக்கிள் பாது

(14ஆம் பக்கம் பார்க்க)

பிஸ்ரல்குழுவின் சூட்டுக்கு கான்ஸ்டபிள் பலி!

வலி. கிழக்கு,ஏப்.2

கல்வியங்காட்டுப் பகுதியில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர்நேற்று மாலை 3-30 மணியளவில் பிஸ்ரல் குழுவினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்

(14ஆம் பக்கம் பார்க்க)

பஸ் சேதம்

யாழ்ப்பாணம்,ஏப்.2

இளைஞர் குழுக்களின் ஏப்ரல் முட்டாள் தின சேஷ்டைகளினால் நேற்று பஸ் ஒன்று சேதமடைந்தது.

பருத்தித்துறையிலிருந்து வல்

(14ஆம் பக்கம் பார்க்க)

காயமடைந்த ஐவர் உட்பட 10 பேர் பளையிலிருந்து நேற்று யாழ்.வந்தனர்!

செஞ்சிலுவைச் சங்க அம்புலன்ஸுகளில்

யாழ்ப்பாணம்,ஏப்.2

பளைப் பிரதேசத்தில் ஷெல் தாக்குதல்களில் காயமடைந்த ஐவர் உட்பட பத்துப் பேர் நேற்று யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

பளையிலிருந்து கடற்கரை வீதி வழியாக இராணுவ பஸ் மூலம் மிருசுவில் வரை படையினரால் இவர்கள் அழைத்துவரப்பட்டனர்.

காயமடைந்தவர்கள் பஸ்ஸுக்குள் கிடத்தப்பட்ட நிலையில் கொண்டுவரப்பட்டனர்.

மிருசுவிலில் வைத்து இவர்களைப் பொறுப்பேற்ற இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளைப் பிரதிநிதிகள் யாழ்.போதனா வைத்தியசாலையில் இவர்களை அனுமதித்தனர்.

நேற்றுக்காலை இரு அம்புலன்ஸ் வாகனங்களுடன் யாழ். செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் தென்மராட்சி நோக்கிப் புறப்பட்டனர். இவர்கள் கிளாலியை அடைந்த போது அதற்கு அப்பால் செல்ல இவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டதை அடுத்தே மிருசுவிலில் வைத்துக் காயம் அடைந்தோரைப் பொறுப்பேற்க இணக்கம் காணப்பட்டது.

அங்கு படைத்தரப்புடன் இடம்

(14ஆம் பக்கம் பார்க்க)

ஈழத் தமிழர்களை நாடு கடத்தாதீர்!

ஜேர்மனியில் ஆர்ப்பாட்டம்

பேர்லின்,ஏப்.2

ஜேர்மனியில் புகலிடம் மறுக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களை நாடு கடத்தக்கூடாது எனக்கோரி ஜேர்மனியின் பிராங்பேட் நகரத்தில் நேற்று ஆர்பாட்டப்பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

பிராங்பேட் தமிழ் மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த ஆர்பாட்டப் பேரணியில் நூற்றுக்கணக்கான தமிழர்கள் கலந்து கொண்டனர்.

நேற்றுக்காலை 10மணிக்கு பிராங்பெட்டிலிருந்த ஆர்பாட்டப் பேரணி ஆரம்பமானது. ஆர்பாட்டக் காரர்கள் இலங்கை அரசுக்கு எதிரான பலவேறு சுலோகங்கள் அடங்கிய அட்டைகளைத் தாங்கிச் சென்றனர்.

இலங்கையில் நடைபெற்றுவரும் மனித உரிமை மீறல் சம்பவங்களை ஜேர்மன் அரசு கண்டிக்க வேண்டும் என்றும் ஆர்பாட்டக்காரர்கள் பேரணியில் கோஷம் எழுப்பினர்.

(இ-6)

சமாதானத்துக்கான வாய்ப்பை பயன்படுத்த ஆயர்கள் கோரிக்கை

கொழும்பு, ஏப்.2

யுத்தத்ததை முடிவுக்குக் கொண்டுவந்து இனப்பிரச்சினைக்கு தீர்வுக்கு காண்பதற்குச் சரியான சந்தர்ப்பம் ஒன்று கிட்டியுள்ளது. அதனை உரிய முறையில் பயன்படுத்துங்கள்.

இவ்வாறு யாழ்., மன்னார் ஆயர்கள் இணைந்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடமும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனிடமும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாண ஆயர் வண.பிதா தோமஸ் சவுந்தரநாயகமும் மன்னார் ஆயர் வண.பிதா ராஜப்பு ஜோசப் ஆகியோர் கூட்டாக விடுத்த வேண்டுகோளில் சர்வதேச நாடு ஒன்றின் மத்தியஸ்தத்துடன் சமாதானப் பேச்சுக்களைத் தொடர்ந்து முன்னெடுக்கக்கூடிய சூழ்நிலையைத் தற்போதைய சமாதான முயற்சிகள் தோற்றுவித்துள்ளன.

இலங்கையில் பேச்சுவார்த்தை மூலம் சமாதானம் கொண்டுவரப்பட வேண்டியதன் அவசியத்தைச் சர்வதேச சமூகம் உணர்ந்துள்ளதுடன் வலியுறுத்தியும் நிற்கிறது - என்று தெரிவித்துள்ளனர்.அப்பாவிப் பொதுமக்களின் வாழ்க்கையை பாழடுத்தும் தேவையற்ற வன்முறைகளில் எவரும் ஈடுபடக்கூடாது என்றும் இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-4-6)

இயக்கச்சிப் பகுதியில் வெள்ளி இரவு கடும் சமர்!

யாழ்ப்பாணம், ஏப்.2

இயக்கச்சிப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று அதிகாலை வரை படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் உக்கிர மோதல்கள் இடம்பெற்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

படையினரின் ஆட்லறித் தளங்கள் மீது புலிகள் நடத்திய ஆட்லறித்தாக்குதல்களை படையினர் வெற்றிகரமாக முறியடித்ததனர் என்றும் -

இந்தத் தாக்குதலில் பெரும் எண்ணிக்கையான புலிகள் உயிரிழந்துள்ளனர் என்றும் -

மோதல்களின் பின்னர் அப்பகுதியில் தேடுதல் நடத்திய படையினர் புலிகள் உறுப்பினர்களின் 21 சடலங்களைக் கண்டெடுத்தனர் என்றும் - பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

அதேசமயம் - நாகர்கோயில் பகுதியில் இடம்பெற்ற மற்றுமோர் மோதலில் மேலும் 7 விடுதலைப் புலிகள் உயிரிழந்தனர் என்றும் அது கூறியது.

நாகர்கோயில் பிரதேசத்தில் இருந்து தெற்கே 2 கிலோமீற்றர் தூரத்தில் பயணம் செய்துகொண்டிருந்த புலிகளின் ஆயுதங்கள் பொருத்தப்பட்ட வாகனங்கள் மீது விமானப்படையினரும் இராணுவமும் இணைந்து தாக்குதல் நடத்தினர் என்றும் படைத்தரப்பு அறிவித்துள்ளது.

(இ-6)

நாடுங்கள்! நன்மையடையுங்கள்!!

சோதிட நிலையம்

சங்கானையூர்

கனக. குமாரசாமி

நிகரை வீதி, சங்கானை. (74982)

விற்பனைக்குண்டு

6 அடி பெற் நீளம் உள்ள கடைச்சல் இயந்திரம் ஒன்று விற்பனைக்கு உண்டு. இது தொடர்பாக தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

நாதன் வெல்டிங் வேக்ஸ்,
27A, சங்கிலியன் வீதி,
நல்லூர்.

(74999)

சண்டிலிப்பாய் சீரணி
அருள்மிகு
ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்
தேவஸ்தானம்

மஹோற்சவ விஞ்ஞாபனம்

கொடியேற்றம் :	**08-04-2000 சனிக்கிழமை** முற்பகல் 11.00 மணி.
சப்பறத் திருவிழா:	**17-04-2000 திங்கட்கிழமை** மாலை 4.00 மணி
தேர்த் திருவிழா:	**18-04-2000 செவ்வாய்க்கிழமை** காலை 9.00 மணி
தீர்த்தத் திருவிழா:	**19-04-2000 புதன்கிழமை** காலை 9.00 மணி
பூங்காவனத் திருவிழா:	**21-04-2000 வெள்ளிக்கிழமை** மாலை 4.00 மணி

விழாக்கால கடைகளுக்கான அனுமதி

05-04-2000 புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆலய வீதியில் இடம்பெறும்.

கடைக்கான முழுத்தொகையும் உடன் செலுத்தி பற்றுச் சீட்டினை பெற்றுக் கொண்டவர்களுக்கு மட்டும் கடைகள் அமைக்க அனுமதி வழங்கப்படும்.

குறிப்பு:- சண்டிலிப்பாய் பிரதான வீதியில் நகுலேஸ்வர வித்தியாலயத்தில் இருந்து லீலா வெதுப்பகம் வரை பிரதான வீதியின் இரு பக்கங்களிலும் பாதுகாப்புக் காரணங்களுக்காக தற்காலிக கடைகள் அமைப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

மேற்படி ஆலயத்தின் பெயரால் பணம், பொருள்கள் சேகரிக்க ஆலய நிர்வாகம் எவரையும் நியமிக்கவில்லை. மோசடிக்காரர்களிடம் பணம் கொடுத்து ஏமாறவேண்டாம். ஆலயத்துக்கு அன்பளிப்புகள் வழங்க விரும்புவோர் ஆலயத்தில் நேரடியாகக் கொடுத்துப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொள்ளும்படி தயவுடன் அடியார்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

(74993) தர்மகர்த்தா சபை சார்பாக

பிரிவுபசார விழா

பருத்தித்துறை கல்லூரி வீதியில் அமைந்துள்ள அரச மத்திய மருத்துவமனையில் பணியாற்றி இளைப்பாறிச் செல்லும் டாக்டர் செல்வவிநாயகம் முத்துக்குமாரசாமியின் சேவையைப் பாராட்டும் பிரிவுபசார விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணிக்கு போரூட் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை ஆதார வைத்திய சாலை நோயாளர் சங்கத் தலைவர் பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் உமா சிவபாதசுந்தரம் கலந்து கொள்வார்.

(க-118)

★ G.A.Q. 2000 PAPER CLASSES

★ ENGLISH LITERATURE

★ A/L & Spoken English

★Gr.5 முதல் O/L வரை சிறந்த பெறுபேறுகளுக்கு

SHAMROCK

(C/11610)

ராஜா

யாழ்ப்பாணம்

4ஆவது வெற்றி வாரமாக
ரஜனிகாந்த், சௌந்தர்யா, ரம்யாகிருஷ்ணன், சிவாஜி மற்றும் பலர் நடித்த

படையப்பா

காட்சிகள்
(C/11604) 10.30, 2.00, 5.00

லிபேட்டி

அச்சுவேலி
இன்று மட்டும்
கார்த்திக் நடிப்பில்
உன்னை நெனைச்சேன் பாட்டுப்படிச்சேன்

காட்சிகள்:- 10.30, 2.30
T.P - 070 - 212223
- 070 - 212678
Fax No.0094 - 70212223

(74992)

நாகம்ஸ்

சுன்னாகம்
கடைசி வாரம்
ரம்யாகிருஷ்ணன்,சௌந்தர்யா
நடித்த

அம்மன்

(ரீல்ஸ்)
காட்சிகள் 11.00, 2.30
(புதிய நேரம்)
மனிதர்களை பேய்களுக்காக கொலை செய்யும் சம்பவங்கள் நிறைந்த காட்சி

(C/11617)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்

மலர்வு 14 - 01 - 1936

உதிர்வு 11 - 01 - 2000 (ஜேர்மனி)

அமரர்

இராசையா மதியாபரணம்

அன்பும் பண்பும் அறமும் மற்றும்
அருங்குணங்களும் அமைந்திடப் பெற்ற
எங்கள் குலவிளக்கே உங்களை
எங்கள் இதயத்தில் வைத்து என்றும் பூசிப்போம்.

எங்கள் குலவிளக்கு 11.01.2000 அன்று இறைவனடி சேர்ந்த வேளையில் நேரில் வந்தும் கடிதங்கள் மூலமும் தொலைபேசி மூலமும் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல உதவிகள் புரிந்தவர்களுக்கும் எங்கள் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (02.04.2000) ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

மனைவி, மக்கள்,
சகோதரர், சகோதரிகள்,
மைத்துனிமார், மருமக்கள்,
உற்றார், உறவினர்.

அம்மன் வீதி,
திருநெல்வேலி.

(75011)

கண்ணீர் அஞ்சலி

செல்வன் தர்மலிங்கம் திருக்குமரன்

எமது பாடசாலையில் விஞ்ஞான ஆசிரியையாகக் கடமையாற்றும் **திருமதி க.குலேந்திரன்** அவர்களின் அருமைச் சகோதரன் தர்மலிங்கம் திருக்குமரன் அவர்களின் அகால மரணச் செய்தி கேட்டு துயரடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் கழகம்.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

(75021)

மரண அறிவித்தல்கள்

சிவதொண்டர் ஏரம்பு தம்பு

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட சிவதொண்டர் ஏரம்பு தம்பு அவர்கள் நேற்றுமுன்தினம் (31-03-2000) வெள்ளிக்கிழமை கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அமரர் ஏ.தம்பு அவர்கள் சிவயோகசுவாமிகளுடன் நேரடியாகப் பழகும் பெரும்பேறு பெற்றவர். நீண்டகாலமாக சிவதொண்டன் நிலையத்துடன் நெருக்கமாக இருந்து சிவப்பணியாற்றியவர்.

அன்னாரின் இறுதிக்கிரியை நேற்று (01-04-2000) சனிக்கிழமை கொழும்பில் நடைபெற்றது.

கொழும்பு முகவரி:
த.சிவானந்தன்(மகன்)
50,ஜானகி லேன்
பம்பலப்பிட்டி,கொழும்பு.

சிவதொண்டன் சபை.
434,காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(C/11618)

சுப்பிரமணியம் நவரட்ணராஜா (வரதன்)

நாரந்தனையைப் பிறப்பிடமாகக் கொண்ட சுப்பிரமணியம். நவரட்ணராஜா நேற்றுமுன்தினம் (31-03-2000) வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02-04-2000) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நாரந்தனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

8ஆம் கட்டை
நாரந்தனை.

(75019)

தகவல்
மனைவி,பிள்ளைகள்.

திருமதி அற்புதம் செல்வமாணிக்கம்

வறுத்தலைவிளானைப் பிறப்பிடமாகவும், உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அற்புதம் செல்வமாணிக்கம் (இளைப்பாறிய ஆசிரியை) அவர்கள் நேற்று (01-04-2000) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பாக்குட்டி - பிள்ளையம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற பொன்னம்பலம் செல்வமாணிக்கம் (P.W.D. Overseer) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பொன்னம்பலம் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மாயவன்(ஆசிரியர்), செல்வி கலாவல்லி(ஆசிரியை, வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம்), திருமதி கலைச்செல்வி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், கோபாலகிருஷ்ணனின் (கொழும்பு) அன்பு மாமியாரும், நிவாஷினியின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் உரும்பிராயிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (02-04-2000) மு.ப10 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஞானவைரவர் கோவில் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

(C/11619)

தகவல்:
செல்வி செ.கலாவல்லி
(மகள்)

மிலேனியம் புதுவருடத்தை முன்னிட்டு மலிவு விற்பனை

நியூ விமாகி

- நிலவிரிப்புகள், ரெக்சின் வகைகள்
- கறிடில், றைஸ்பிளேற்ஸ், ரீ பொட்
- ஸ்கொட்டிங்பான்(White,Colour)
- கப் & சோசர் செற்–பிளேற்ஸ் வகைகள்
- அன்பளிப்பு பொருள்கள், ரீசெற், டினர்செற்
- கொமேட் வெள்ளை கலர் செற், பிடே செற்
- மாபிள் வகைகள், சுவர்மாபிள், நிலமாபிள், சுவாமிப்படமாபிள்
- யூறினல், கால்மிதி, 3/4'கோஸ்பைப், 1'கோஸ்பைப்
- குளியலறை, T.P சவர், பிடேசவர், முகம்பார்க்கும் கண்ணாடி
- வெள்ளை சிமெந்து, சிவப்பு சிமெந்து
- வோஸ் பேசின் வெள்ளைகலர்
- கோண பேசின் வெள்ளைகலர்
- குசினித் தொட்டிகள் மாபிள், ஸ்ரீல், அலுமினியம் பலவித அளவுகளில்
- பேசின் ரப், பிராஸ் ரப், S.N. ரப்

தரமான மலிவான பொருள்களைப் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

நியூ விமாகி

(பஸ்தரிப்புக்கு எதிரில்),
27/3, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(75003)

இணுவில் லயன்ஸ் கழகத்தின்

அங்குரார்ப்பண விழாச் சிறப்புமலர்

மக்கள் சேவைக்கு இன்று முதல் அர்ப்பணம்

02-04-2000

சர்வதேச லயன்ஸ் கழகங்களுடன் இணையும் நன்னாள்

உலகளாவிய ரீதியில் நலிவுற்ற மக்களின் சேவையையே குறிக்கோளாகக் கொண்டு செயலாற்றி மிகவும் பெரிய சேவைஸ்தாபனமாக விளங்குபவை 'சர்வதேச லயன்ஸ் கழகங்கள்' — இந்த அமைப்பு பூகோள ரீதியாக 185 க்கும் மேற்பட்ட நாடுகளில் 14. 5 லட்சம் அங்கத்தவர்கள் 44, 500 க்கும் மேற்பட்ட கழகங்களில் இணைந்து 740 மாவட்டங்களில் செயற்பட்டு வருகின்றது. இந்த ஸ்தாபனம் 1917 ஆம் ஆண்டில் 'மெல்வின் ஜோன்ஸ்' என்ற அமெரிக்கப் பெரியாரால் ஸ்தாபிக்கப்பட்டது. லயன்ஸ் கழகங்கள் 'கண்ணுக்கு முதலிடம்' அளித்து அளப்பரிய சேவைகளை ஆற்றி வருவதோடு பொது மருத்துவம், நீரிழிவு, விழிப்புனர்வு போன்ற சேவைகளையும் முதியோருக்கு — குறிப்பாக நலிவுற்ற மக்களுக்கு — வேண்டிய சேவைகள் மற்றும் பொது முக்கிய சமூக சேவைகளையும் மாணவர்களுக்குரிய கல்விச் சேவை போன்ற பல துறைகளில் குறிப்பிடத்தக்க பெரும் சேவைகளையும் ஆற்றி வருகின்றன. அண்மையில் சர்வதேச லயன்ஸ் கழகங்கள் கண்ணுக்கு முதலிடம் கொடுக்கும் சேவைத் திட்டத்தின் கீழ் யாழ். போதனா வைத்தியசாலை கண்பிரிவுப் பகுதியை நவீன முறையில் சீரமைக்க 1. 35 லட்சம் அமெரிக்க டொலர்களை (10 மில்லியன் ரூபாவை) வழங்கியுள்ளன.

இலங்கை 306 ஆவது பெருமாவட்டமாகவும் இதன் கீழ் 306 A, 306B, 306 C, என்று மூன்று மாவட்டங்களாகவும் பிரிக்கப்பட்டு ஒவ்வோர் ஆளுநரின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது இம் மூன்று மாவட்டங்களிலும் ஆறாயிரத்து 500 க்கும் மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட 225 கழகங்கள் வரை செயற்பட்டு வருகின்றன — வடகோணத்திலுள்ள கழகங்கள் மாவட்டம் 306 B க்குக் கீழ் செயலாற்றுகின்றன. இம் மாவட்டம் 306 B க்கு தற்போது ஆளுநராக லயன் Dr இயன் அவர்கள் பணியாற்றி வருகிறார். இவர் நீர்கொழும்பு லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்தவர். இலங்கையில் பிரபல (கண்ணுக்குரிய) நேத்திர பண்டிதன் (Optometrist) மாவட்டம் 306 B தற்போது 10 பிராந்தியங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றுக்கும் பிராந்தியத் தலைவர்கள் ஆளுநரினால் நியமிக்கப்பட்டு, அவர்கள் லயன்ஸ் கழகங்களை வழி நடத்தி வருகின்றார்கள் — எங்கள் பிராந்தியம் 10 க்குத் தலைவராக லயன் ஏ. தங்கேஸ்வரன் அவர்கள் செயலாற்றுகிறார்கள். ஒவ்வொரு பிராந்தியத் தலைவருக்கும் இரண்டு வலயத் தலைவர்கள் உதவி புரிகிறார்கள். வடமாகாணத்திலுள்ள கழகங்கள் இந்த ஆண்டில் 9, 10 பிராந்தியங்களுக்குள் ஒதுக்கப்பட்டு மொத்தம் 16 கழகங்கள் செயற்பட்டு வருகின்றன.

இன்று அங்குரார்ப்பணம் செய்யப்படும் இணுவில் கழகம் 17 ஆவது கழகமாகவும் 2000 ஆண்டில் 306B மாவட்டத்தில் முதலாவது கழகமாகவும் அமைகிறது. இந்த வடபகுதி கழகங்களில் 560 க்கும் மேற்பட்ட அங்கத்தவர்கள் இணைந்து 'லயன்ஸ்' (Lions) என்ற பெருமையுடன் செயலாற்றி வருகிறார்கள்.

மேலும் லயன்ஸ் கழகங்கள் செயலாற்றி வரும் சேவைத்திட்டங்களை முறையாக நெறிப்படுத்துவதற்காக இத்துறைகளில் திறமை மிக்கவர்களை மாவட்ட ஆளுநர் முக்கிய சேவைகளுக்கு மாவட்டத் தலைவர்களாக நியமித்து இவர்களின் உதவியுடன் லயன்ஸ் கழகங்களின் சேவைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

புகழ்பூத்த இணுவில் கிராமம்

யாழ். குடாநாட்டில் வலிகாமம் தெற்கில் தொன்மை மிக்க பெருங்கிராமமாக இணுவில் விளங்குகின்றது. சித்தர்கள், பக்தர்கள் நிறைந்த இணுவை ஊரில் கலை வடிவம் மிக்க கோவில்கள் உள்ளன. கல்வி கற்றலுக்காக வள்ளல், இராமநாதன் நிறுவிய இராமநாதன் கல்லூரியும்யாழ். பல்கலைக் கழகத்தின் நுண்கலை வளாகமும் மற்றும் இணுவில் மத்திய கல்லூரியும் இணுவில் இந்துக் கல்லூரியும் அமைந்துள்ளன. 'மிஷனறிமார்' நிறுவிய பிரசித்திபெற்ற 'மக்லியட்' வைத்தியசாலை இணுவில் மத்தியில் அமைந்துள்ளது. தொழில் அதிபர்கள், அரச உத்தியோகத்தர்கள், மருந்தாளர்கள், பெரும் விவசாயிகள் என்ப பல பிரமுகர்கள் இக்கிராமத்தின் பௌதிக வளங்களைச் சிறப்பிக்கின்றனர். தானதர்மங்கள் செய்வதில் முன் நிற்கும் பெரியோர்கள் வாழும் இவ்வூரில் மக்களிடையே ஸ்தாபன ரீதியாக இணைந்து இயங்க சேவைக் கழகமில்லாத குறையை நீக்க மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத் தலைவரும் அங்கத்தவர்களும் முன் வந்தனர். குறிப்பாகத் தற்போது லயன்ஸ் கழக விஸ்தரிப்பு, வளர்ச்சிக்கு பொறுப்பாக இருக்கும் மாவட்டத் தலைவரும் முன்னாள் வட பிராந்தியத் தலைவரும் ஆலோசகருமாகிய லயன் S. S. தங்கராஜா அவர்களும் இப்பகுதியில் உதவி அரச அதிபராகக் கடமை புரிந்து வரும் தற்போது யாழ். பிராந்திய ஆணையாளராகவும் அத்துடன் லயன்ஸ் கழகங்களின் தேசிய ஒற்றுமைக்குப் பொறுப்பான மாவட்டத் தலைவருமான லயன் A. C. செபநாயகம் அவர்களும் இணைந்து செயற்பட்டு இணுவில் லயன்ஸ் கழகத்தை ஆளுநரின் அனுமதியுடன் ஸ்தாபித்துள்ளார்கள். இக் கழகத்தைக் குறுகிய காலத்திற்குள் தோற்றுவிக்க இணுவில் வாழ் பிரமுகர்களுள் இக் கழகத் தலைவர் லயன் K. தேவராஜா (தலைவர் — வணிகத்துறை, யாழ். பல்கலைக் கழகம்) உப தலைவர் லயன் T. கைலாசநாதன் (ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்) மற்றும் லயன் C. இலகுநாதன் (பிரபல சமூக சேவையாளர்) ஆகியோரின் பங்களிப்பு போற்றத்தக்கது.

ஸ்தாபக தலைவர்
லயன் கி. தேவராஜா

டாக்டர் குகதாசன் கௌரவிப்பு

இக் கழகத்தை ஸ்தாபிக்க ஏதுவாக மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத் தலைவர் லயன் Dr. உரோமகேஸ்வரன் அவர்களின் தலைமையில் இக்கழகத்தின் செயற்திட்டத் தலைவராக அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வரும் லயன் S.S. தங்கராஜா அவர்கள் பல வேலைத்திட்டங்களை இணுவில் வாழ் மக்களுக்காக செயற்படுத்தினார். முக்கியமாக இம்முகாம்களில் யாழ். போதனா வைத்தியசாலை கண் சத்திரச்

லயன்
ஏ. தங்கேஸ்வரன்
பிராந்தியத் தலைவர்
(பிராந்தியம் 9 - 10)

சிகிச்சை நிபுணர் டாக்டர் குகதாசன் அவர்களின் ஒத்தாசையுடன் கண்விழிப்படலத்தினால் (Cataract) பாதிப்புற்றிருந்த 60 நலிவுற்ற மக்களுக்கு விழிவெண்படலம் அகற்றும் சத்திரச் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன. டாக்டர் எஸ். குகதாசன் அவர்கள் ஆற்றிய இப்பெரும் சேவையைப் பாராட்டி இன்று நடைபெறும் இணுவில் கழக அங்குரார்ப்பண வைபவத்தில் பெரியார் சிவத்தமிழ்ச் செல்வி தங்கமா அப்பாக்குட்டி அவர்களால் கௌரவிக்கப்படும் நிகழ்ச்சியும் மிகவும் பொருத்தமான நிகழ்ச்சியாக அமைந்துள்ளது.

நன்றி
லயன் C. பொன்னம்பலம்.
செயலாளர்,
மானிப்பாய் வட்டம் - லயன்ஸ் கழகம்.

வடக்கில் பணியாற்றும் லயன்ஸ் கழகங்கள்

பிராந்தியம்: 09	பிராந்தியம்: 10
யாழ்ப்பாணம்	நல்லூர்
சுன்னாகம்	மானிப்பாய் வட்டம்
தீவகம்	கொக்குவில்
வடமராடசி	உரும்பிராய்
கோப்பாய்	மன்னார்
மானிப்பாய் பரிஷ்	வட்டுக்கோட்டை
சாவகச்சேரி	வவுனியா
பளை	வவுனியா மாவட்டம்

17 ஆவது கழகம் - இணுவில்

புதிய இணுவில் லயன்ஸ் கழகத்தை வாழ்த்துவதில் இணைகின்றோம்

மெடி எயிட்ஸ்
நிறுவனத்தினர்
நல்லூர் - இருபாலை.

சிறி வெங்கடா
ஜெம் அன் ஜுவல்லறி
299, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சுந்தர்சன்
சந்தை முன்பாக,
மானிப்பாய்.

குகன் ஸ்ரோர்ஸ்
180, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. இல. 2027

இ.ச. பேரம்பலம்
சக நிறுவனம்,
50, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சிவகணேசன்
ஸ்ரோர்ஸ்,
41, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

றூபா
பல்பொருள் வாணிபம்,
164A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

கரசன் எலக்ரிக்கல்ஸ்
J.M.C. கட்டடம்,
இல. 14, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

தர்மரூபன்
தொலைத்தொடர்பு,
போட்டோஸ்ரற் சேவை,
மானிப்பாய்.

எரிக் கணேஷ்
(OPTICIANS)
566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

கஜீபன் ஜுவல்லறி
கே. கே. எஸ். வீதி.
இணுவில்.

ராஜா கிறீம் ஹவுஸ்
36, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/11612)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை
கரவெட்டி

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ. பி. டி. பி.)
1998 ஆம் ஆண்டு கையேற்ற பின்பு நடைபெற்ற
செயல் திட்டங்களின் விவரம்

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாம் கடந்த உள்ளூராட்சித் தேர்தலின்போது மக்களால் தெரிவுசெய்யப்பட்டு உள்ளூராட்சிச் சபைகளை பொறுப்பேற்று அதனூடாக மக்களின் தேவைகளை இனங்கண்டு அதன் அடிப்படையில் சேவைகளைச்செய்து வருகின்றோம். எமது கட்சியின் செயலாளர் நாயகமும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான கௌரவ கே. என். டக்ளஸ் தேவானந்தா அவர்களின் நேரடி வழிகாட்டல்கள் மூலமும் யாழ். மாவட்ட பிரதான அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. கே. வி. குகேந்திரன் (ஜெகன்) அவர்களது இடைவிடாத நெறிப்படுத்தல்கள் மூலமும் எமது சபையின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோரின் ஒத்துழைப்போடும் எமது பிரதேச மக்களின் இதயபூர்வமான ஆதரவோடும் நாம் இதுவரை எமது சபை மூலம் மேற்கொண்ட புனரமைப்புச் செயல்திட்டங்களை பத்திரிகை வாயிலாகச் சமர்ப்பிக்கின்றோம்.

என்றும் மக்கள் சேவைக்குரிய,

திரு. வல்லிபுரம் நடராசா
தலைவர் (சமாதான நீதிவான்)
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி.

அமைப்பாளர்,
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ. பி. டி. பி.)
உடுப்பிட்டித் தொகுதி.

மாண்புமிகு ஜனாதிபதி அவர்களிடமிருந்து
கௌரவ நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான
கௌரவ கே. என். டக்ளஸ் தேவானந்தா அவர்களின்
முயற்சியினால் பெறப்பட்ட

விசேட மூலதன நிதி- ரூபா 30 இலட்சம் 1998

1998 இல் முடிக்கப்பட்ட வேலைகள்:-

1.	நெல்லியடி மத்திய சந்தை புனரமைத்தல்	1,500,000.00

1998ம் ஆண்டு வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபை (றான்) நிதியிலிருந்து செய்யப்பட்ட வேலைகள்:-

1.	தச்சந்தோப்பு வீதி	150,000.00
2.	மூடக்காட்டு வீதி	300,000.00
3.	உடுப்பிட்டி சந்தை வீதி	150,000.00
4.	மாதாகோவில் வீதி	150,000.00
5.	உடுப்பிட்டி மீன்சந்தை புனரமைப்பு	250,000.00
6.	ஆயுள்வேத வைத்தியசாலை நெல்லியடி	300,000.00

1998ம் ஆண்டு பிரமாண அடிப்படையிலான நிதியிலிருந்து செய்யப்பட்ட வேலைகள்:-

1.	குளக்கரை வீதி	150,000.00
2.	பத்தினி அம்மன் வீதி	100,000.00
3.	கொல்லன்தோட்டம் பொதுக்கிணறு	26,000.00
4.	கலட்டியான் தோட்டம் பொதுக்கிணறு	41,000.00
5.	காட்டுப்புலம் பொதுக்கிணறு	20,000.00
6.	நாச்சிமார்கோவிலடி பொதுக்கிணறு	12,000.00
7.	எரிச்சோலை குழாய்க்கிணறு	30,000.00
8.	வடலித்தோட்டம் குழாய்க்கிணறு	12,000.00

1998ம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து செய்யப்பட்ட வேலைகள்:-

1.	அத்தாய் சனசமூக நிலையம்	150,000.00

1998ம் ஆண்டு சபை நிதியிலிருந்து செய்யப்பட்ட புனரமைப்பு வேலைகள்:-

1.	கம்பர்மலை வைரவர் கோவில் வீதி	100,000.00
2.	வல்வெட்டி பாடசாலை வீதி	100,000.00
3.	விண்ணன் வீதி	100,000.00
4.	கொற்றாவத்தை எழுப்பிட்டி வீதி	200,000.00
5.	வீனஸ் சுற்றுவட்ட வீதி	100,000.00
6.	மத்தொணி ஆலடி வீதி	100,000.00
7.	அத்துளுஅம்பன் கோயிலடி பொதுக்கிணறு திருத்தம்	25,000.00
8.	நெல்லியடி பொதுநூலகம் திருத்தம்	85,000.00
9.	கட்டைவேலி உப அலுவலகம் திருத்தம்	40,000.00
10.	சரஸ்வதி வித்தியாலய வீதி	100,000.00
11.	புதுக்குளம் புனரமைத்தல்	7,000.00

விசே மூலதன நிதியிலிருந்து 1999 ஆம் ஆண்டு நடைபெறுகின்ற வேலைகள்:

1.	நெல்லியடி மத்திய சந்தை புனரமைத்தல்	150,000.00

1999 ஆம் ஆண்டு பிரமாண அடிப்படையிலான மூலதன நிதியிலிருந்து செய்யப்பட்ட வேலைகள்:

1.	அல்லையம்பதி வீதி	130,000.00
2.	இந்திரம்மன் கோவில் வீதி	150,000.00
3.	குழாய்க்கிணறு மணற்பாதி	22,000.00
4.	பொதுக்கிணறு ஞானவைரவர் கோயிலடி	70,000.00
5.	குழாய்க்கிணறு தேவரயாளி	35,000.00
6.	கரம்பாவெளி, சுடலை வீதி	100,000.00

1999 ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து செய்யப்பட்ட வேலைகள்:

1.	பாரதிதாசன் சனசமூக நிலையம் புனரமைப்பு	50,000.00
2.	வேதாரணியேஸ்வரா சனசமூக நிலையம் புனரமைப்பு	50,000.00
3.	வேதாரணியேஸ்வரா பாலர் பாடசாலை புனரமைப்பு	200,000.00
4.	நெல்லியடி சனசமூக நிலையம் புனரமைப்பு	25,000.00

1999 ஆம் ஆண்டு சபை நிதியிலிருந்து செய்யப்பட்ட வேலைகள்:

1.	உடுப்பிட்டி பொது நூலகம் திருத்தம்	34,000.00
2.	நெல்லியடி பொதுச்சந்தை திருத்தம்	12,500.00
3.	நெல்லியடி பொதுச்சந்தை மலகூடத்திருத்தம்	23,000.00
4.	குளங்கரை வீதி திருத்தம்	13,000.00
5.	இளான் வேம்படி வீதி	150,000.00
6.	சமரபாகு வீதி	150,000.00
7.	அந்திரான் சந்தை வீதி	100,000.00
8.	இரும்பு மதவடி ஆலங்கட்டை வீதி	200,000.00
9.	மருதடிக்குளம் வீதி	150,000.00
10.	சரஸ்வதி வித்தியாலய வீதி	160,000.00
11.	அந்திரான் சந்தை புனரமைப்பு	51,000.00
12.	வாகனம் நிறுத்தும் கொட்டகை அமைத்தல்	53,000.00
13.	கட்டைவேலி சனசமூக நிலைய புனரமைப்பு	20,000.00

1998ம் ஆண்டின் பின் புதிதாக நியமனம் பெற்றவர்கள் விவரம்:

	பெயர்	பதவி	அலுவலகம்
1.	சி. ஜெயகாந்தன்	வருமான மேற்பார்வையாளர்	உடுப்பிட்டி
2.	ஐ. கௌரி	நூலகத் தொழிலாளி	,,
3.	மு. புவனேஸ்வராஜா	பதில் அலுவலகக் காவலாளி,	,,
4.	கு. குணசேகரம்	பதில் சந்தைக் காவலாளி	நெல்லியடி
5.	க. சிவரஞ்சன்	,, ,, ,,	,,
6.	க. விநாயகராசா	பதில் அலுவலகக் காவலாளி	,,
7.	இ. தெய்வேந்திரநாயகம்	பதில் அலுவலகக் காவலாளி	தலைமையலுவலகம்
8.	சி. ஜெயநாதன்	ஆயுள்வேத தொழிலாளி	கட்டைவேலி
9.	ம. மகிந்தன்	பதில் நூலகத் தொழிலாளி	கட்டைவேலி/உடுப்பிட்டி
10.	த. முருகேசு	சுகாதாரத் தொழிலாளி	நெல்லியடி
11.	ஆ. சிவானந்தநாயகம்	பொதுத்தொழிலாளி	தலைமையலுவலகம்
12.	கு. சபேசன்	,, ,,	,,
13.	க. செல்வராசா	,, ,,	,,
14.	இ. ரவீந்திரன்	,, ,,	,,
15.	க. சத்தியசீலன்	அலுவலகக் காவலாளி	நெல்லியடி
16.	பி. ஆனந்தி	பதில் ஆயுள்வேத தொழிலாளி	கட்டைவேலி
17.	தயாநிதி சேகரன்	ஆயுள்வேத தொழிலாளி	உடுப்பிட்டி
18.	கி. பாலசுப்பிரமணியம்	பதில் ஆயுள்வேத மருத்துவ உத்தியோகத்தர்	நெல்லியடி
19.	கு. சுசிலாதேவி	பதில் ஆயுள்வேத டிஸ்பென்சர்	கட்டைவேலி

(பி/11606)

ஊடகத் துறைகளில் பணிபுரியும் ஆசிரியரின் விவரம் சேகரிப்பு

கொழும்பு, ஏப்ரல் 2

பத்திரிகை அறிவித்தல்கள், பத்திரிகைகளுக்குச் செய்திகளை வெளியிடுதல், அறிக்கை விடுதல் மற்றும் பொதுசன ஊடகத்துறைக்குச் செய்திகளை அனுப்புதல் போன்ற விடயங்களில் கல்வித் திணைக்களத்தின் கீழ் கடமையாற்றும்உத்தியோகத்தர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் ஈடுபட்டிருந்தால் அவர்கள் தொடர்பான முழுவிவரங்களையும் அறியத்தருமாறு கல்வி, உயர்கல்வி அமைச்சு, சகல மாகாணப் பணிப்பாளர்கள், வலயக்கல்விப் பணிப்பாளர்கள், கல்விக் கல்லூரி பீடாதிபதிகள் ஆகியோருக்கு சுற்றறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

கல்வி, உயர்கல்வி அமைச்சினால் அண்மையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ள 99/33 இலக்கச் சுற்றறிக்கைக்கு இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் மீது தாபனக் கோவையின் கீழ் ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு கல்விப் பணிப்பாளர்களுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

கல்வித் திணைக்களத்தின் கீழ் கடமை புரியும் உத்தியோகத்தர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் பலர் பத்திரிகையாளர்களாகப் பணிபுரிந்து வருவது தெரியவந்திருப்பதாகவும், இவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவிருப்பதாகவும் கல்வி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க)

ஆசிரியர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோரின் பெயர் விவரம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 2

தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் உள்ள ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில்ஒரே அமர்வில் 3பாடங்களில் சித்தியடைந்தவர்களிடம் இருந்து கடந்த நவம்பரில் கோரப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களில் கடைசித் தொகுதியினரின் பெயர் விவரங்கள் கீழே தரப்படுகின்றன.

ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், மனைப்பொருளியல், விவசாயம், உடற்கல்வி, சித்திரம் ஆகிய பாடங்களுக்கே ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை ஏப்ரல் 17 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை யாழ். வலயக் கல்விப் பணிமனையில்நடைபெறவுள்ளது.

தெய்வேந்திரன் பாமினி (உடையார்கட்டு வடக்கு, உடையார்கட்டு), சிவராசா சசிதரன் (உடையார்கட்டு வடக்கு, உடையார்கட்டு), வைததிலிங்கம் ஜெயக்குமார் (புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு), வைத்திலிங்கம் ஜெயக்குமார் (சந்திரா வீதி, மட்டக்களப்பு), திவ்யமணி திவ்யரூபன் (விஸ்வமடு, முல்லைத்தீவு), தம்பு நித்தியானந்தன் (உடையார்கட்டு, முல்லைத்தீவு), தம்பிராசா யாழினி (புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு), சிவராஜசிங்கம் ஜெயகாந்(சேவியர் பில்டிங், உடையார்கட்டு), சிதம்பரநாதன் சிவகுமார் (12 ஆம் கட்டை, விஸ்வமடு), ஞானசேகரம் இன்பரூபன்(புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு), தமிழரசி தங்கராசா (விஸ்வமடு, முல்லைத்தீவு).

நற்றுணை ராஜினி (புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு), சிவலதா கற்கண்டு (10 ஆம் வட்டாரம்,புதுக்குடியிருப்பு), வீரசிங்கம் இமாவதி (புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு), இராஜரட்ணம் நிமலராஜன் (கொத்தம்பியார்குளம், துணுக்காய்), நல்லலிங்கம் லிங்கேஸ்வரி (4 ஆம் யூனிற், திருநகர் மல்லாவி), தனபால சிங்கம் சுகிர்ஜினி (மீசாலை கிழக்கு), முத்தையா சிவநாதன் (யோகபுரம், மல்லாவி), யோகநாதன் சுகதாசன்முகம் ஜெகதேசலா (யோகபுரம், மல்லாவி), முத்தையா விக்னேஸ்வரி (திருநகர், மல்லாவி), குலேந்திரன் சுதர்சர் (உடுவில் கிழக்கு, சுன்னாகம்), தயாளினி நர்மலிங்கம் (குடத்தனை மேற்கு, துன்னாலை), பரமசோதி காண்டீபன்(கொத்தம்பியார்குளம், மல்லாவி), குணரட்ணம் ராசிகுமார் (கொக்காவில் றோட், துணுக்காய்), கயல்விழி யோகநாதன் (ஐயிலங்குளம், துணுக்காய்), ரட்ணம் இன்பதா (அளிஞ்சியன்குளம், யோகபுரம்), யட்சாயினி மகேஸ்வரன் (சுருவேலன்குளம், அ. த. க. பாடசாலை, துணுக்காய்), சுதர்சனா சுந்தரராஜன்(வளநகர், யோகபுரம்), சிவானந்தம் சண்முகி (நமனக்குளம், யோகபுரம்), குணபாலன்சதீஸ்குமார்(கொக்காவில் றோட், துணுக்காய்), பாமினி கிருபானந்தன் (மல்லாவி, வளநகர், யோகபுரம்) சிவநாதன்சிவசத்தியமோகன் (நாவற்காடு, அச்சுவேலி), சுகுணா வடிவேலு (ஒட்டன்குளம் றோட், துணுக்காய்), சிவரட்ணம் ஸ்ரீலக்ஸ்மணன் (ஆசிரியவிடுதி, மல்லாவி மத்திய கல்லூரி)

நடராசா யசோதா (வளநகர், மல்லாவி யோகபுரம்), செல்வராசா ரவிச்சந்திரன் (சுன்னாகம் மேற்கு), கந்தசாமி மாலதி(வளநகர்,யோகபுரம்), தர்மலிங்கம் சுதர்சன் (முதலாம் யுனிற், மல்லாவி), குணபாலன் சற்குணதேவி (கொக்காவில் றோட், துணுக்காய்), ஐயாத்துரை சிவகுமார்(உபதபால் நிலையவீதி, துணுக்காய்), இராசையா நிவேந்திரன் (பாரதிநகர்,யோகபுரம்), சின்னப்பா தாரணி (யோகபுரம், மல்லாவி), நடராசா சசிகலா தேவி (2 ஆம் யூனிற், யோகபுரம், மல்லாவி), சுப்பிரமணியம் றோகினி (பாரதிநகர், மல்லாவி), செல்வரத்தினம் சசிதரவாணி (4, ஆம் யூனிற், மல்லாவி), கந்தசாமி சுதேசன் (கொத்தம்பியார்குளம்,துணுக்காய்), பத்மாஜினி ஆறுமுகம் (யோகபுரம், மல்லாவி), சுடர்தீபன் (4, ஆம் யூனிற், மல்லாவி), சிவலோஜனி சிவபாதம் (அம்பலப்பெருமாள் குளம், அ. த. க. பாடசாலை, அக்கராயன்). (ஐ-10)

மருந்தில் மதுரம் அதிமதுரம்

ஆயிரக்கணக்கான வருடங்களாக அதிமதுரம் மருந்தியலில் முக்கியத்துவம் வாய்ந்த மூலிகையாகக் காணப்படுகிறது. சித்த மருத்துவத்தில் மட்டுமன்றி சீன மருத்துவத்தில் "என்றும் இளமையைப் பேணுவதற்காக (Rejuvenation Therapy) பயன்படுத்தப்பட்டு வந்தது. அத்தோடு தாகம், சுரம், வலி, இருமல், மூச்சுக் கஷ்டம் போன்றவற்றை நிவர்த்திக்கவும் இதனைச் சீனர் பயன்படுத்தினர்.

இந்துக்களின் மருத்துவத்திலும் இம்மூலிகை முக்கிய பங்கு வகிக்கின்றது.மேலைத்தேச வைத்தியர்களால் சத்திர சிகிச்சையின் தந்தையெனக் கருதப்படும் "சுசுருதர்" என்னும் ஆயுர்வேத சித்தர் அதிமதுரத்தை பெரும்பாலும் தனது சிகிச்சை முறைகளில் பயன்படுத்தி வந்தார். இதனைவிட புராதன எகிப்து, கிரேக்க, உரோம நாகரிகங்களிலும் இம்மூலிகை மருத்துவத் தேவைக்காகப் பயன்படுத்தப்பட்டது என்று அந்த இடங்களில் கிடைத்த சான்றுகள் மூலம் தெரியவந்துள்ளது.

"கிளிசரைசா கிளப்ரா" ("Glycyrrhiza Glabra") என்னும் தாவரவியற் பெயரைக் கொண்ட இம்மூலிகை தாவர இராச்சியத்தில் "லெகுமினசே" குடும்பத்தைச் (Leguminosae) சேர்ந்தது. இதனை ஆங்கிலத்தில் "லிக்கோரைஸ்" (Liquorice) அல்லது "சுவீட் வுட்" (Sweetwood என்றும் சிங்களத்தில் "வெல்மி" (Welmi) என்றும் அழைப்பர்.

இந்தத் தாவரம் கூடுதலாக வடஆபிரிக்கா, ஸ்பெயின் இத்தாலி, கிரேக்கம், தெற்கு ரஷ்யா, அரேபியா, ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் சாதாரணமாக இயற்கையாகக் காணப்பட்டாலும் இந்தியாவிலுள்ள பஞ்சாப் மாநிலத்தின் இமயமலைப் பகுதிகளிலும் இத்தாலி, பிரான்ஸ், ரஷ்யா, ஸ்பெயின், ஜேர்மனி, சீனா போன்ற நாடுகளிலும் தேவைகளுக்கேற்ப பயிர் செய்யப்படுகின்றது.

இலங்கையில் இந்தத் தாவரம் வளர்க்கப்படாவிட்டாலும் அதிமதுரத்தின் வேர் மேற்கூறிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுப் பயன்படுத்தப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் அதிமதுர வேரை தமிழ் மருந்துக் கடைகளில் தாராளமாகப் பெற்றுக் கொள்ளலாம். அதிமதுரத்தின் புறத்தோல் நீக்கிய வேர்ப்பகுதியே மருத்துவத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்றது. இவ்வேரில் அடங்கியுள்ள இரசாயன அல்லது வேதியற் பொருள்கள் வருமாறு:-

கிளிசரைசின், வெல்லம், அஸ்பராஜின் மாப்பொருள், கல்சியம், மக்னீசியம் உப்புக்கள் தானிக்கமிலம் (Tannic Acid), ரெசின் சேர்ந்த எண்ணெய் பைற்றோ ஸ்ரெறோல் (Phyto Sterol), ஈஸ்றோஜன் (Oestrogen) என்பன ஆகும். (கரும்பிலுள்ள வெல்லத்தை விட 50% மடங்கு இனிப்புச் சுவை கிளிசரைசினில் உண்டு என்பது குறிப்பிடத்தக்கது).

இம்மூலிகையானது எமது உடலில் உடல் உரமாக்கி (Tonic), குளிர்ச்சி உண்டாக்கி (Cooling) உள் சுழல்களால் ஏற்படும் அரிப்பை கார ஊடகங்களிலும் பார்க்கத் திறம்பட நிவர்த்திக்கும்.

★ மேலைத்தேச மருத்துவத்திலும் மலமிழக்கி, இருமலுக்கான பாணி வகைகள் (Cough syrup),தொண்டையில் ஏற்படும் அரிப்புக்காக உமிழும் இனிப்புகள் (Throat Lozenges) முதலியவற்றை தயாரிப்பதற்கு அதிமதுரம் பயன்படுத்தப்படுகிறது. அத்தோடு குமட்டல், வாந்தி முதலியவற்றை ஏற்படுத்தும் மருந்துகளில் உள்ள நாற்றத்தையும் சுவையையும் மறைப்பதற்கும் இம் மூலிகையைச் சேர்க்கிறார்கள்.

★ சித்த மருத்துவத்தில் அதிமதுரத்தால் செய்யப்பட்ட குடிநீர், ஊறல் கஷாயம், பிழிந்தெடுத்த சாறுகளை மேற்கூறப்பட்ட நோய்களுக்குக் கொடுப்பது முண்டு (முக்கியமாக சுவாசத் தொகுதி சம்பந்தமான ரோகங்களுக்கு).

★ தொண்டை, குரல்வளை, சுவாசக் குழாய்களில் ஏற்படும் தாபிதங்கள் அல்லது அழற்சி, குரற்கம்மல், இரைப்பையில் ஏற்படும் அழற்சி, குடற்புண், வயிற்று வலிக்கும் ஆரம்பத்தில் ஏற்படும் அதிரினல் சுரப்புக் குறைபாடுக்கும் இம்மூலிகையின் வேர் துகள்களைத் தினமும் (இருவேளை 1கிராம்முதல்4கிராம் அல்லது பிழிந்தெடுத்த சாறாயின் 2 தொடக்கம் 5 மி. லீற்றர் எடுக்க வேண்டும்.

★ அதிமதுரத்தின் வேரைப் பாலில் ஊறவிட்டு தினமும் ஒருமுறை அருந்தினால் குரல் இனிமை உண்டாகும்.

★ அதிமதுரம் சேர்ந்த மருந்துகளைத் தொடர்ந்து நெடுங்காலமாகப் பாவிப்பதால் எடை அதிகரிப்பு, கணுக்கால் வீக்கமும் காணப்பட்டதுஇதனைத்தொடர்ந்து நடத்தப்பட்ட ஆய்வுகளின் படி அதிமதுரத்திலுள்ள இரசாயனப் பதார்த்தங்களால் உப்பும் நீரும் அதிகமாகத் தேங்குவதுடன் அதிகளவு பொற்றாசியம் உப்பும் உடலிலிருந்து வெளியேற்றப்படுகின்றது. இதனால் இருதயப் பலவீனமுள்ளவர்கள், உயர்குருதி அழுக்கமுள்ளவர்கள், (Hypertension) சிறுநீரக கோளாறுடையவர்கள், அதி ஸ்தூலதேகி அல்லது பருமனுடையவர், கர்ப்பிணிப் பெண்கள் இதனைப்பயன்படுத்துவதற்கு முன்னர் தகுந்த வைத்திய ஆலோசனை பெறவேண்டும். கடைகளில் வாங்கும் அதிமதுரவேருடன் சில வேளைகளில் குன்றிமணி வேரும் கலப்படம் (Adulteration) செய்வதுண்டு. எனவே வாங்கும் போது இந்த வேரை வேறு பிரித்து அறியக்கூடியவர்களின் உதவியோடு அவதானமாக வாங்க வேண்டும்.

இ. மணிவர்ணன்
(சித்த மருத்துவத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

நோய் தீர்க்கும் மூலிகை

வட்டு. லயன்ஸ் கழகத்தில் புதிய உறுப்பினர் சேர்ப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 2

'வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் பல நற்பணிகளை ஆற்றியிருக்கிறது. ஆனால் கடந்த கால அனர்த்தங்களால் அதன் நிர்வாகிகளும் உறுப்பினர்களும் கொழும்புக்கும் பிற நாடுகளுக்கும் சென்றுள்ளார்கள். இதனால் மூன்று நான்கு ஆண்டுகளாக இந்தக்கிளை வட்டுக்கோட்டையிலிருந்து இயங்கவில்லை. எமது தொண்டுகளைத்தொடர்ந்து செவ்வனே செய்யக்கழகத்தையுணரவைக்கும் பணியை நாம் மேற்கொண்டுள்ளோம். இன்றைய வைபவம் அதன் ஓர் அங்கமேயாகும்'

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்துக்கு புதிய உறுப்பினர்களைச் சேர்க்கும் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய லயன்ஸ் மாவட்ட இணைப்பாளர் லயன் சே.வி. முத்துக்குமாரசாமி இவ்வாறு கூறினார்.

கடந்த 19 ஆம் திகதி கழக அலுவலகத்தில் நடைபெற்ற இந்த வைபவத்துக்கு வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத் தலைவர் லயன் டாக்டர் எஸ். சதாசிவம் தலைமை வகித்தார்.

மானிப்பாய் லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் எஸ். அருளானந்தம் வைபவத்தில் உரை நிகழ்த்தினார். 'எமது லயன்ஸ் கழகம் மூலம் செய்யும் தொண்டால் மக்கள் ஆனந்தம் அடையும் போது நாம் பெறும் மகிழ்ச்சிக்கு ஈடிணையாக எதையும் குறிப்பிடமுடியுமா? ஆகவே தொண்டில் ஆர்வம் உள்ளவர்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்து தமது பங்கையாற்ற வேண்டும்' என்று அவர் கேட்டுக்கொண்டார்.

வைபவத்தின் ஆரம்பத்தில் புதிய உறுப்பினர்கள் இணைப்பாளரால் சம்பிரதாய பூர்வமாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். (ஐ)

காரைநகரில் சிறுதானியச் செய்கை இம்முறை இல்லை

காரைநகர், ஏப்ரல் 2

காரைநகரில் உகந்த காலநிலை உள்ள போதிலும் விவசாயிகள் இம்முறை சிறுதானிய பயிர்ச் செய்கையை மேற்கொள்ளவில்லை

பாதுகாப்பு வேலிகளை ஊடறுத்து கால்நடைகள் வயல்களுக்குள் பிரவேசித்துள்ளமையே இதற்குக் காரணம் எனக்கூறப்படுகின்றது. கடந்த பெரும்போக நெற்செய்கையின் போது கால்நடைகள் பெரும் பயிரழிவை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (ஐ-13)

'பொத்' 'பொத்' என விழும் விமானங்கள்

மர்மங்கள் துலங்குவதாக இல்லை

இலங்கையில் விமானங்கள் வீழ்வது என்பது ஏதோ மாதத்திலிருந்து பனங்காய் விழுவதுபோலாகி விட்டது. கோடிக்கணக்கான பணத்தை அள்ளிக்கொட்டி வாங்கப்படுகின்ற விமானங்களும், ஹெலிக்கொப்டர்களும் 'பொத்து பொத்து' என்று விழுந்து கொண்டே இருக்கின்றன ஒவ்வொன்றும் விழுந்தவுடன் அனுதாபங்கள் கிளம்பும், விசாரணைக் குழுக்கள் அமைக்கப்படும்; ஏதோ குளிரூட்டப்பட்ட அறைகளிலே இருந்தபடி விசாரணைகளை மேற்கொள்ளும் குழுக்கள் விமானம் உயரம் குறைவாகப் பறந்ததால் தான் தாக்கப்பட்டதென்றோ — அல்லது இடந்திரத்தில் ஏற்பட்ட கோளாறென்றோ அறிக்கை சமர்ப்பிக்கும். இதனையடுத்து புதிய விமானங்கள் வாங்கப்படும், மிகவும் உயரத்தில் சொர்க்கம், நரகமெல்லாம் தெரியக்கூடிய தூரத்தில் விமானங்கள் பறக்கும்... ஆனால் மீண்டும்...

அண்மைய காலங்களில் இலங்கை விமானப்படை இழந்த விமானங்களின் எண்ணிக்கை அதிர்ச்சி அடையவைப்பதாக உள்ளது. விமானங்களின் வரிசையில் அவ்ரோ ரக விமானங்கள் 2, அன்ரனோவ்32 ரக விமானங்கள்4, வை8ரகவிமானம் ஒன்று வை.12ரக விமானங்கள்2, அன்ரனோவ் 26 ரக விமானம் ஒன்று என்பன அடங்கும். குண்டுவீச்சு விமானங்களில் புக்காரா குண்டு வீச்சு விமானங்கள் சீ சியாமாசெட்டி ரக குண்டு வீச்சு விமானம் ஒன்று, கிபிர் ரக குண்டுவீச்சு விமானம் ஒன்று என்பன அடங்கும்.

ஹெலிக்கொப்டர்களில் எம். ஐ. 24 ரக ஹெலிகள் 4, எம். ஐ. 17. ரக ஹெலிகள் 2, பெல் 212 ரக ஹெலிகள் 3 என்பன வீழ்ந்து நொருங்கியுள்ளன, காணாமற் போயுமுள்ளன. இது தவிர இன்ரேலியத் தயாரிப்பான உளவு பார்க்கும் தன்னியக்க விமானங்கள் நான்கும் காணாமற் போயும் சேதமடைந்தும் உள்ளன.

அண்மைக்காலங்களில் கடந்த டிசெம்பர் 17 ஆம் திகதி ஆனையிறவுக்கு அருகிலுள்ள ஊரியான் பகுதியில் எம்.ஐ. 24 ரக ஹெலிக்கொப்டர் ஒன்று வீழ்ந்தது. பின்னர் கடந்த பெப்ரவரி 18 இல் எழுதுமட்டுவாள் பகுதியில் பெல் ரேஞ்ஜர் ரக ஹெலிக்கொப்டர் ஒன்று வீழ்ந்து நொறுங்கிப் போனது. பின்னர் கடந்த வார ஆரம்பத்தில் விமானப் படையினரிடம் எஞ்சி இருந்த தன்னியக்க வேவு விமானமும் செயலிழந்து இறக்கப்பட்டது. இறுதியாக கடந்த வியாழக்கிழமை சிங்களப் பகுதியான அநுராதபுரத்திற்குத் தெற்காக 9 கிலோமீற்றர் தொலைவில் இருக்கும் சிறாவஸ்தி புரவிற்கும் மஹாறூவன்குளம் ஆகிய பகுதிகளுக்குமிடையிலுள்ள வீரவெவ என்ற பகுதியில் 36 படையினருடனும் வெளிநாட்டு விமான ஓட்டிகளுடனும் 'அன்ரனோவ் 26' ரக விமானமொன்று எரிந்து விழுந்திருக்கிறது.

விமானத்தில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு தான் இதற்குக் காரணமென முதலில் முண்டியடித்துக் கொண்டு அரச தரப்பு அறிக்கை வெளியிட்டதாயினும் அவசர அவசரமாக வெளியிடப்பட்ட அறிக்கைகளில் ஒரு பதற்றமும் பரபரப்பும் காணப்பட்டதானது பலரையும் சந்தேகிக்க வைத்து விட்டது. விமானம் பலாலியிலிருந்து புறப்பட்டதாக ஒரு தரப்பு சொல்ல, மறு தரப்பு அநுராதபுரத்திலிருந்து புறப்பட்டதாகச் சொல்லிக்கொண்டிருந்தது. விமானம் புறப்பட்ட நேரம் கூடச் சரியாக அறிவிக்கப்படவில்லை. 11-20 க்குப் பலாலியிலிருந்து விமானம் புறப்பட்டதாக ஓர் அறிக்கை சொல்லியது. 11. 50க்கு அனர்த்தம் சம்பவித்ததாகச் சொல்லப்பட்டது. ஆனால் இன்னொரு தரப்பு 12. 10க்கு புறப்பட்டு 12. 30 க்கு வீழ்ந்ததாகச் சொல்கிறது. ஆனால் சம்பவத்தை நேரில் பார்த்தோர் வேறு நேரத்தில் நடந்தது என்கிறார்கள். இவையெல்லாவற்றிற்கும் உச்சம் வைத்தாற்போல குறிப்பிட்ட விமானம் இயந்திரக்கோளாறில்தான் வீழ்ந்ததெனச் சொல்லிக்கொண்டே விமானம் வீழ்ந்த இடத்தின் அண்மைப் பகுதிகளில் படையினர் உடனடியாகவே தேடுதல் நடத்தியுள்ளனர். தீப்பற்றி எரிந்து வீழ்ந்த விமானத்திற்கும் தேடுதலுக்கும் என்ன சம்பந்தமென்று சந்தேகக் கேள்விகள் எழுப்பப்பட்டன. அந்தக் கேள்விகள் வெளியே வரமுடியாதபடி அரசின் செய்தித் தணிக்கை தடை போட்டுவிட்டது.

ஆனால் எவ்வளவுதான் அரசும் அதனது ஊது குழல்களும் மூடி வைத்தாலும் தற்போது விடயங்கள் சில கசியத் தொடங்கியிருக்கின்றன. அதன்படி இந்த அனர்த்தத்திற்கும் விடுதலைப் புலிகளின் தாக்குதல்தான் காரணம் எனச் சந்தேகம் ஏற்படுகிறது. ஏற்கனவே விடுதலைப் புலிகளின் நடமாட்டம் உள்ளதாகக் கருதப்படும் வில்பத்து காட்டுப் பகுதியில் பறந்து கொண்டிருந்தபோதே விமானத்தின் இயந்திரத்தில் கோளாறு ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அண்மையில் நீர்கொழும்பு, கதிரான பகுதியில் வீழ்ந்து அழிந்த 'அன்ரனோவ்' விமானத்தைப் பற்றி விசாரணை நடத்தவந்த ரஷ்ய அதிகாரிகள் அநுராதபுரம் சென்று அந்த விமானச் சேதங்களையும் பார்வையிட்டு விட்டு அதிர்ச்சி தரும் செய்தியொன்றை வெளியிட்டிருக்கின்றனர். அதாவது வீழ்ந்து நொருங்கிப் போன விமானத்தில் 6 துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் உள்ளதாக அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இவையெல்லாவற்றுக்கும் முற்றுப் புள்ளி வைக்கக் கூடியதாக விமானத்தின் கறுப்புப் பெட்டியைப் பரிசோதித்துப் பார்த்தால் அதில் பதிவாகியிருக்கும் உரையாடல்களைக் கொண்டு உண்மை நிலைமையை அறிந்து கொள்ள முடியும் தான். ஆயினும் கறுப்புப் பெட்டி கண்டெடுக்கப்பட்டு விட்டதாகச் சொல்லப்படுகிறதே தவிர, அதிலிருந்த விவரங்கள் பற்றி இதுவரை எதுவும் தெரிவிக்கப்படவில்லை. புலிகள் தாக்கியிருக்கலாம் என்பதை முழுமையாக நிராகரிக்க முடியாதென்றும் விமானப்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளமை இந்தச் சந்தேகங்களையெல்லாம் வலுவாக்குவனவாகவே உள்ளன.

ரஷ்ய கம்பனி ஒன்றின் இலங்கை முகவராகச் செயற்படும் நிறுவனமே விமானப் படையினருக்கு இந்த விமானத்தை வாடகைக்குப் பெற்றுக் கொடுத்திருந்தது. இந்த நிறுவனம்தான் ஏற்கனவே யாழ்,-கொழும்பு சேவையில் ஈடுபட்ட 'லயன் எயார்' என்ற நிறுவனத்துக்கும் விமானங்களை வாடகைக்குப் பெற்றுக் கொடுத்திருந்ததாகவும் சொல்லப்படுகிறது அப்படிப் பார்க்கும் போது இந்த நிறுவனம் இழந்த இரண்டாவது விமானம் இதுவரும் ஏற்கனவே 'லயன் எயார்' விமானமொன்று மன்னார் கடல் பகுதியில் காணாமற் போயுள்ளது.

இதே வேளை இந்த 'அன்ரனோவ்' விமானங்கள் ரஷ்யத் தயாரிப்பென சொல்லப்பட்டாலும் அவை உண்மையில் உக்ரைய்னிலேயே தயாரிக்கப்படுகின்றன. முன்னர் ரஷ்யாவுடன் உக்ரைன் இணைந்திருந்தபோது தயாரிக்கப்பட்ட விமானங்கள் தரமானவையாக இருந்தன. 1991 இல் உக்ரைன் ரஷ்யாவை விட்டுப் பிரிந்து தனி நாடாகிய பின்னர் தயாரிக்கப்பட்ட இந்த 'அன்ரனோவ்' விமானங்கள் தரமானதாக இருக்கவில்லை என்றும் குற்றச்சாட்டுக்கள் உள்ளன. இதுவரை உலகநாடுகளில் வீழ்ந்த விமானங்களின் 30-க்கும் மேற்பட்டவை இந்த அன்ரனோவ் ரக விமானங்களே ஆகும். அண்மையில் கதிரானப் பகுதியில் நிகழ்ந்த அன்ரனோவ் விமான விபத்துக்குப் பின் உலக நாடுகள் சர்வதேச பாவனைக்கு அன்ரனோவ் விமானங்களைப் பயன்படுத்த வேண்டாம் என எச்சரிக்கப்பட்டுள்ளன.

அனுராதபுரத்தில் சம்பவம் நடந்த வியாழனன்று விமானத்தில் பயணம் செய்த 36 படையினரில் 4 அதிகாரிகள் உட்பட 24 இராணுவத்தினரும், 11 கடற்படை வீரர்களும், ஒரு பொலீஸாரும் பலியாகி உள்ளனர். இவர்களில் பலர் பளைப் பகுதி மோதலில் காயமடைந்தவர்கள், ஏனையோர்தான் படுபரிதாபமானவர்கள். அதாவது தற்போதைய மோதல்களில் பலியான உறவினர்களின் மரண வீடுகளில் கலந்து கொள்வதற்காகச் சென்றவர்களே அவர்கள். மரணவீட்டிற்குச் சென்றவர்களே மரணமாகிப் போனது பரிதாபம் தான்.

இந்த விமானம் இதுநாள் வரை யாழ்—கொழும்பு பயணிகள் சேவையிலேயே பயன்படுத்தப்பட்டு வந்தது அன்றைய தினமும் பயணிகளை ஏற்றிவரப் பலாலி சென்ற குறிப்பிட்ட விமானம் திடீர் ஏற்பாட்டின்படி அநுராதபுரம் சென்றுவிட்டுத் திரும்பி வந்து பயணிகளை ஏற்றிச் செல்வதெனத் திட்டமிடப்

ரா. இளவரசன்

பட்டிருந்ததாம். ஆயினும் சொல்லப்படுவதுபோல் இந்த விமானம் இயந்திரக்கோளாறினால் வீழ்ந்திருக்குமானால் — அது ஏற்கனவே திட்டமிட்டபடி பயணிகளை ஏற்றிச் சென்றிருந்தால்— அப்பாவிப்பயணிகள் பலரே பலியாகவேண்டியதாக இருந்திருக்கும் என்பதே பயங்கரமாக உறைக்கின்றது.

இந்தச் சம்பவங்களை அடுத்து யாழ்—கொழும்பு விமான சேவையும் இடைநிறுத்தப்பட்டுள்ளது, அத்துடன் தொடர்ந்தும் 'அன்ரனோவ்' விமானங்களைச் சேவையில் ஈடுபடுத்துவதா என்பது பற்றியும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. தொடரும் விசாரணைகள்தான் நிலைமையை தெளிவுபடுத்தும்.

★

வெளிமாவட்டங்கள் செல்ல பயண அனுமதி வழங்கப்பட்டோர்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 2

யாழ். குடாநாட்டில் இருந்து வெளி மாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம்மாதம் முதலாம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு—

சங்கானை

(131644ஏ), (135940ஏ), (135940பி), (138184ஏ), (138184பி), (138184டி), (138281ஏ), (138281பி), (138284ஏ), (138284பி), (138289ஏ), (138418 ஏ), (138418 பி), (138435 ஏ), (138435 பி), (138435 சி), (138490 ஏ), (138497 ஏ), (138500 ஏ), (138503 ஏ), (138503 பி), (139539 ஏ), (139539 பி), (139592 ஏ), (139664 ஏ), (139621 ஏ).

(138611 பி), (139622 ஏ), (139628 ஏ), (139623 பி), (139695 ஏ), (139695பி), (139711 ஏ), (139711 பி), (139715 ஏ), (139719 ஏ), (139719 பி), (139794 பி), (139830ஏ), (141336 ஏ).

(141336பி), (141336சி), (141411 ஏ), (141417ஏ), (141417பி).

சாவகச்சேரி

(136077ஏ), (141013ஏ).

யாழ்ப்பாணம்

(140881ஏ), (140882ஏ), (140883ஏ), (140945ஏ), (140947 ஏ), (140984ஏ), (141086ஏ), (141086பி), (131780 ஏ).

கரவெட்டி

(136670ஏ).

கோப்பாய்

(124305ஏ), (124027ஏ), (134047பி), (134437ஏ), (136547சி), (131493ஏ), (136549பி), (136513ஏ), (136513பி), (136517ஏ), (136511ஏ), (136520ஏ), (136526பி), (136526ஏ), (136516பி), (136511ஏ), (136501ஏ), (136508பி), (136531ஏ), (136532ஏ), (136534ஏ), (136534பி), (133537ஏ), (136537பி), (136537சி), (136537டி), (136537ஈ), (136540ஏ), (136540பி), (136544ஏ), (136544பி), (136553ஏ), (136553பி), (136553சி), (136561 ஏ), (136561பி), (136562ஏ), (136563ஏ), (136564ஏ), (136564பி), (136619ஏ), (136626ஏ), (136637ஏ), (136786ஏ), (139478ஏ), (139843ஏ), (139859ஏ), (139859பி), (139861ஏ), (139865ஏ), (139872ஏ), (139873ஏ), (139878ஏ), (139878பி), (139880ஏ), (139880பி).

(139882ஏ), (139884ஏ), (139885ஏ), (139885பி), (139893ஏ), (139893பி), (139930ஏ), (139930பி), (139930சி), (140951ஏ).

நல்லூர்

(123101ஏ), (123101பி), (124389ஏ), (128352ஏ), (128332பி), (128312சி), (128353ஏ), (128353பி), (128355ஏ), (133225ஏ), (132262ஏ), (136032ஏ), (136050ஏ), (136053ஏ), (136067ஏ), (136088ஏ), (136142ஏ), (136142பி), (136143ஏ), (136145ஏ), (136145பி), (136146ஏ), (136150ஏ), (136735ஏ), (136735பி), (136736ஏ), (136739ஏ), (136742ஏ), (136742பி), (136745ஏ), (136747ஏ), (136749ஏ), (136749பி), (136772ஏ), (136772பி), (136792ஏ), (139833ஏ), (139853ஏ), (139857ஏ), (139857பி), (139857சி), (139857டி), (139889ஏ), (140883ஏ), (140890ஏ), (140941ஏ), (140942ஏ), (141012ஏ), (141082ஏ), (141088ஏ), (135484ஏ), (135484பி), (135484சி), (135787ஏ), (135947ஏ), (135947பி), (138214ஏ), (138265ஏ), (138372ஏ), (138395ஏ), (138395பி), (138426ஏ), (138437ஏ), (138437பி), (138437சி), (138437டி), (138520ஏ), (138525ஏ), (138561ஏ), (138561பி), (139542ஏ), (139544ஏ), (139544 பி), (139563ஏ), (139683ஏ), (139683பி), (139683சி), (139683டி), (139683ஈ), (139685ஏ), (139723ஏ), (139727ஏ), [139751ஏ], [139751பி], [139754ஏ], [139756ஏ], [139757ஏ], [139757பி], [139757சி], [139760ஏ], [139812ஏ], [139813ஏ], [141182ஏ], [141212ஏ], [141309ஏ], [141338 பி], [141331ஏ], [141422ஏ].

சண்டிலிப்பாய்

(129208 ஏ), (131245ஏ), (131329 ஏ), (131329 பி), (131329 சி), (131643 ஏ), (135760 ஏ), (135760 பி), (135799 ஏ), (138226 ஏ), (138323 ஏ), (138323 பி), (138375 ஏ), (138375 பி), (138404 ஏ), (138404பி), (138404 சி), (138454 ஏ), (138454 பி), (138478 ஏ), (138478 பி), (138478 சி), (138489 ஏ), (138501 ஏ), (138501 பி), (138518 ஏ), (138518 பி), (138518 சி), (138518 டி), [138545 ஏ], [139585 ஏ], [139585 பி].

(139536 ஏ), (139629 ஏ), (139636 ஏ), (139665 ஏ), (139678 ஏ), (139678 பி), (139700 ஏ), (139700 பி), (139759 ஏ), (141421 ஏ), (141421 பி), (142180 ஏ).

தெல்லிப்பழை

(136354 ஏ), (136354 பி), (125326 ஏ), (135685 ஏ), (135685 பி), (138254 ஏ), (138254 பி), (138376 ஏ), (138479 ஏ), (139491 ஏ), (139555 ஏ), (139555 பி), (139615 சி), (139578 ஏ), (139599 ஏ).

(139657ஏ), (139749ஏ), (139749பி), (139750ஏ), (139799ஏ), (139799பி), (139799சி), (139799டி), (139821 ஏ), (தொடரும்)

உதயன்

மனிதநேயத்தின் பேரால்...

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு வடமராட்சி கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கப் படைகளுக்கும் இடையில் வெடித்த மோதலின் பின்னர், அது பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்துக்கும் பரவியது.

அதன் விளைவாக, 1,200 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 5,000 பொதுமக்கள் போர்ப் பிரதேசமாக மாறியுள்ள பச்சிலைப் பள்ளியிலிருந்து வெளியே வரமுடியாது அங்கு சிக்குண்டுள்ளனர். போர் உக்கிரமாக நடைபெறும் போதுபொது மக்கள் இவ்வாறு அந்தப் பிரதேசத்திற்குள் சிக்கிக் கொள்வது பல சந்தர்ப்பங்களில் நடைபெறுவது உண்டு.

மோதல்கள் பலமாகுவதற்கு முன்னரே, பொதுமக்கள் தமது உயிர்ப் பாதுகாப்புக் கருதி அனேகமாக வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து விடுவர். ஆனால் போக்குவரத்து வசதிகளும் நடைபெற முடியாதவாறு, மக்கள் தமது இருப்பிடங்களை விட்டுச் செல்லமுடியாதவாறு, போர் மோசமானால் வேறு வழியின்றி சிக்கிக் கொள்ள நேரிடுவது உண்டு. பச்சிலைப்பள்ளி மக்களுக்கும் அதே கதியே ஏற்பட்டிருக்கிறது.

பச்சிலைப்பள்ளிக்கும் தென்மராட்சிக்கும் — யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான போக்குவரத்து இருதரப்பு மோதல் காரணமாகத் துண்டிக்கப்பட்ட நிலையில், மேற்படி ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் போர்ப் பிரதேசத்திற்குள் சிக்கி விட்டனர்.

அதனால் கடந்த ஆறு நாள்களாக அவர்கள் பல கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருப்பார்கள். அவர்களது வாழ்க்கை 24 மணி நேரமும் பெரும் பீதியுடனும் பதற்றத்துடனும் கழிந்திருக்கும் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது. எந்த நேரத்தில் தமக்கு என்னாகுமோ என்றலையப்பிராந்தியுடன் நாள்களை நகர்த்திக் கொண்டிருக்கும் அவர்கள், உண்பதற்கு உணவில்லாமல் மட்டினியால் வாடுவார்கள் என்பதும் நிச்சயம்.

தாம் செய்யாத குற்றத்துக்காக, இப்படி ஓர் ஆபத்தான, பதற்றம் நிறைந்த வாழ்க்கை நிலையில், அவர்கள் வெறும் நடைப்பிணங்களாகி இருப்பர். இது ஒரு மனிதநேய, மனிதாபிமான விவகாரமாகும்.

அவர்களுக்கு உயிராபத்து விளைவிக்கும் நடவடிக்கையில் ஈடுபடாது கவனமாக செயலாற்றுவது போரில் ஈடுபட்டிருக்கும் இரண்டு தரப்புகளினதும் பெரும் பொறுப்பாகும்.

அதே போல, அவர்களைப் போர் அபாயம் இல்லாத தூர இடங்களுக்கு — ஆபத்தற்ற பகுதிகளுக்கு — செல்வதற்கு குறிப்பிட்ட நேரத்துக்காவது மோதலை நிறுத்தி வகை செய்ய வேண்டும். இரண்டு தரப்புகளும் பொதுமக்களை மீட்டு வருவதற்கு உதவுமாறு ஸ்ரீஜிலுவைச் சர்வதேசக் குழுவினரைக் கேட்டுக்கொண்டால் அவ்வாறு செய்ய அவர்கள் தயாராகவே உள்ளனர். ஆனால் இப்பத்தி எழுதப்படும் வரை — நேற்று முற்பகல் வரை — அத்தகைய நிலைப்பாடு உருவாகியிருக்கவில்லை.

பொதுமக்களின் நலன்கருதி, இருதரார்தும் 5,000 வலிதர்களையும் மீட்பதற்கு விரைந்து செயற்பட வேண்டும். இல்லையேல் பாதுகாப்பு யாருக்காக, போர் யாருக்காக என்ற கேள்விகள் எழும். அதற்கு இடங்கொடாமல், இரண்டு தரப்புகளில் ஏதாவது ஒன்றாவது முன்முயற்சியில் ஈடுபட வேண்டும் என்று மனிதநேயத்தின் பேரால் கேட்டுக்கொள்கிறோம்.

சியராலியோனில்

240 கிளர்ச்சியாளர்கள் ஐ. நா. படையிடம் சரண்!

பிரீடவுண், ஏப்ரல் 2

மேற்கு ஆபிரிக்க நாடான சியராலியோனில் சமாதான நடவடிக்கைகளை மேற்பார்வையிட்டு வரும் ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப் படையிடம் 240 கிளர்ச்சியாளர்கள் சரணடைந்துள்ளனர்.

கடந்த 9 வருட காலமாக உள்நாட்டுப் போரினால் பாதிப்படைந்த சியராலியோனில் கடந்த வருடம் ஜூலை மாதம் சமாதான ஒப்பந்தம் அமுலுக்கு வந்தது. சமாதான நடவடிக்கைகளை ஐ. நா. படை மேற்பார்வையிட்டு வந்தது.

சமாதானத்தின் பின் சிறு சிறு குழுக்களாகக் கிளர்ச்சியாளர்கள் சரணடைந்து வந்தனர். ஆனாலும் இவ்வளவு பெரும் எண்ணிக்கையான — 240 பேர் — ஆயுதங்களுடன் சரணடைந்தது இதுவே முதன்முறை எனத் தெரிவிக்கப்படுகிறது.

சரணடைந்த கிளர்ச்சியாளர்கள் தமது வாழ்வை அமைதியாகக் கழிக்க ஐ. நா. அமைதிப்படையினர் நிகழ்ச்சித்திட்டம் ஒன்றைச் செயற்படுத்த உள்ளனர்.

(ஐ—ரி—8)

தாய்வான் சட்டப்பேரவையை கலைப்பதற்கு இணக்கம்

தாய்பேய், ஏப்ரல் 2

தாய்வானில் தேசிய சட்டப் பேரவையைக் கலைக்க இணக்கம் ஏற்பட்டுள்ளது.

தாய்வானில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள சுதந்திர ஆதரவு ஜனநாயக முன்னேற்றக்கட்சி பல்வேறு அரசியல் மாற்றங்களை அமுலுக்குக் கொண்டுவந்துள்ளது.

342 உறுப்பினர்களைக் கொண்ட சட்டப் பேரவையைக் கலைத்து மாற்றுத் திட்டம் ஒன்றைக் கொண்டுவரும் புதிய அரசின் யோசனையை எதிர்க்கட்சியும் ஏற்றுள்ளது.

நாட்டின் இறைமை, சுதந்திரம் ஆகியவற்றைபிரதிபலிக்கக்கூடிய வகையில் இந்தப் புதிய யோசனை அமையும் என்றும் —

புதிய சட்டப் பேரவை தன்னிச்சையாக இயங்கக் கூடியதாக இருக்க வேண்டும் என்றும் — அரசியல் கட்சிகள் சுட்டிக் காட்டின.

சீனாவுடன் நல்லுறவை வளர்க்கக்கூடிய வகையில் பல செயற்பாடுகளைப் புதிய அரசு அமுல் செய்யவிருக்கின்றது. (இ-க-3)

அசாமில் 43 தீவிரவாதிகள் சரண்

கௌகாத்தி, ஏப்ரல் 2

இந்தியாவில் அசாம் மாநிலத்தில் 43 தீவிரவாதிகள் சரணடைந்துள்ளனர்.

இந்தியாவின் வடக்கு மாநிலமான அசாமில் தனி மாநிலம் கோரிப் போராடி வரும் உல்பா தீவிரவாதிகள் 38 பேர் உட்பட 43 கிளர்ச்சியாளர்களே சரணடைந்துள்ளனர்.

இவர்கள் பெருந்தொகை

யான வெடிமருந்துகளையும் ஆயுதங்களையும் இராணுவத்தினரிடம் ஒப்படைத்தனர்.

சமீபத்தில் சோனிப்பூர் மற்றும் கௌகாத்தியில் 28 அல்பா தீவிரவாதிகள் சரணடைந்திருந்தனர்.

[ஐ-ரி]

மீண்டும் குண்டுப் பீதி

சென்னைப் புறநகர் தாம்பரத்தில் வெடி பொருள்கள் மீட்பு

சென்னை, ஏப். 2

தமிழ்நாட்டில் ஓய்ந்திருந்த வெடிகுண்டுப் பீதி மீண்டும் தலைதூக்கியுள்ளதாக மாநில காவல்துறை எச்சரித்துள்ளது.

மாநிலத் தலைநகர் சென்னையின் புறநகர்ப்பகுதியான தாம்பரத்தில் 3ஆயிரத்து400 மின்சார டெட்டனேட்டர்கள், 2 ஆயிரம் சாதாரண டெட்டனேட்டர்கள், 100 மீற்றர் வயர்கள், 80 ஜெலட்டின் குச்சிகள் உட்பட பெருமளவு வெடி பொருள்கள் கண்டு பிடிக்கப்பட்டன. இதனை அடுத்தே காவல் துறை எச்சரிக்கை வெளியிட்டுள்ளது. மேற்கண்ட வெடி பொருள்களை எடுத்து வந்த இருவர் பொலீஸாரைக்கண்டவுடன் வெடிபொருள்களைப் போட்டு விட்டு ஓடிவிட்டனர். அவர்கள் இருவரையும் தமிழக பொலீஸார் தேடிவருகின்றனர். [ஐ-ரி]

சாத்தானின் ஆதிக்கத்தை தகர்க்கும் தபசு காலம்

சகோதரன்
க. திருவம்பலம்

லெந்து காலத்துக்குள் நாம் மீண்டும் வந்துவிட்டோம். இந்தப் பெரிதான கிருபையைக் கடவுள் எம்மோடு பகிர்ந்து கொண்டமைக்காகக் கடவுளுக்கு நன்றி செலுத்துவோம்.

லெந்து காலம் மரங்கள் இலைகளை உதிர்த்து, புதிய பசுந் துளிர்களை வரவேற்கும் காலம். அதேபோன்று மனித மனங்களிலும் கறைபடிந்த, வேண்டாத, மாம்சத்தின் கிரியைகளாகிய விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரக ஆராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், பிரிவினைகள், வைராக்கியம், கோபம், சண்டைகள், மார்க்க பேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள் போன்ற கடவுளுக்கு விரோதமான காரியங்களை உதிர்த்து விடுவோம். கடவுளின் சந்தோஷமான ஆவியின் கனிகளாகிய அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் ஆகிய புதிதான பசுந் துளிர்கள் நம் உள்ளத்தில் அரும்புவதற்கு இடமளிப்போம்.

ஆண்டவர் இயேசு சுவாமி இப் பூமியில் வாழ்ந்த காலத்தில் பகற்காலம் இருக்கும் வரை என்னை அனுப்பியவருடைய கிரியைகளைச் செய்யவேண்டும். ஒருவரும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது என்றார்.

நாம் இன்னும் எத்தனை காலம் இப் பூமியில் வாழப் போகின்றோம்? எத்தனை காலம் வாழ்ந்தோம் என்று எண்ணிக் கணக்கிடுவதிலும் பார்க்க அன்பானவர்களே, நாம் வாழ்ந்த காலத்தில் எத்தனை பயனுள்ள காரியங்கள் செய்தோம் என்று எண்ணிப் பார்ப்பதே சிறப்பானதாகும்.

எந்த நேரத்தில் இறை அழைப்பு எமக்குக் கிடைக்கின்றதோ நாம் அறியோம். ஆனால் மனுக்குலமோ சொத்துக்களைச் சேர்ப்பதிலும் சுகங்களை அனுபவிப்பதிலும் ஓலி வேகத்திற் செயற்படுவதை நாம் காணலாம். தனக்கென மட்டுமல்லாது தன் பிள்ளைகள், பிள்ளைகளின் பிள்ளைகள் என்று சொத்துக்களையும் சுகங்களையும் சேர்க்கும் மனிதர்கள் அதிகரித்து வருவதையும் நாம் காணுகின்றோம்.

வீடுவாசல் இன்றி வீதியிலும் இரவல் நிலத்திலும் வாழுகின்றது மனுக்குலம். எனக்கு உனக்கென்று சொத்துக்களைச் சேர்த்து எல்லையிட்டு வரம்புகட்டி, வாழ்கின்றான் மனிதன்.

சொத்துக்கள் சேர்க்கும் காலமா இது? சுக போகங்களை அனுபவிக்கும் நேரமா இது? இல்லையே; சாத்தானின் பிடியில் சிக்கியிருக்கும் சக சகோதரர்களுக்கு நற்செய்தி கூறும் நன்னாள் இது வல்லவா?

உலகைப் பிடித்திருக்கும் சாத்தானின் அக்கிரமக் கட்டுக்கள் யாவையும் அறுத்து ஒவ்வொரு தனி மனித வாழ்விலும் வசந்தம் வீசச் செய்ய வேண்டியது மனிதர்களாகிய நமது கடமை ஆகும்.

தபசு காலம் எமது அகத்தில் உள்ள சாத்தானின் ஆதிக்கத்தைத் தகர்த்தெறிந்து, உலகுக்குப் பொன்னான நாளாக மலர அருள் நாதர் இயேசு சுவாமியிடம் மன்றாடுவோம்.

தவக்காலச் சிந்தனை

(இருபத்தாறாம் நாள்)

நாளை

பங்குனி 21
திங்கட்கிழமை
திதி: சதுர்த்தசி
பின்னிரவு 12.55 வரை
நட்சத்திரம்: பூரட்டாதி
பிற்பகல் 3.23 வரை.
யமகண்டம்: 12.10 1.40
ராகுகாலம்: 7.40 - 9.10
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

உதய வாக்கு

பெருமைக்குரிய செயலை ஒருவன் செய்கிறான் என்றால், அவன் இறந்த பிறகும் வாழ்வதற்குத் தயாராகிறான் என்று பொருள்.

— ப்ரொப்காம்

எதிரொலி...

- கிடியன் -

- சமாதானப் பேச்சு வார்த்தைகளை எதிர்த்துத் தென்னிலங்கையில் ஆங்காங்கே ஊர்வலங்களும் கூட்டங்களும் நடத்தப்படுகின்றன.
- ★ பேரினவாதம் போரினவாதமாகப் பரிணமிக்கின்றதோ?
- இராணுவத்துக்கு 15,000 பேரைச் சேர்க்கும் திட்டத்துடன், அதிரடிப்படைக்கு மேலும் 11,000 பேரைச்சேர்க்கவும் அரசு திட்டமிட்டுள்ளது.
- ★ அகைக்கோர் அளவில்லை!
- கிளிநொச்சியில் பல இடங்களிலுள்ள புதைகுழிகளிலிருந்து நாற்பத்தொரு எலும்புக் கூடுகள் இதுவரை மீட்கப்பட்டுள்ளன.
- ★ வன்னிக்கான பொருளாதாரத் தடை நீடித்தால், நடமாடும் எலும்புக்கூடுகளின் தொகையும் நாளுக்கு நாள் அதிகரிக்குமே!
- சில்லறைத் தட்டுப்பாட்டால் யாழ்ப்பாணத்திற் பலவித சிக்கல்கள் ஏற்படுகின்றன.
- ★ சில்லறைகள் இல்லாதபடியால் சொல் ''அறை''கள் தாராளமாகப் புழங்குகின்றனவோ?
- வன்னியில் இராணுவத்திற்கு ஏற்பட்ட பின்னடைவுக்குக் காரணமாயிருந்த ஏழு இராணுவ அதிகாரிகள் கட்டாய லீவில் அனுப்பப்பட்டுள்ளனராம்?
- ★ அவர்களின் 'அதிஷ்டத்தை' எண்ணி ஏங்குவோர், ''கட்டாய லீவில் செல்ல வேண்டும்'' என்பதைத் தம் இலட்சியமாகவே கொள்ளக்கூடும்!
- இனநெருக்கடித் தீர்வுக்கு எந்த ஓர் அரசியல் கட்சியும் நேர்மையாகச் செயற்படவில்லை என்கிறார் ஏ.ரி. ஆரியரத்னா!
- ★ ஸ்ரீலங்கா தலைவருக்கே இப்போதுதான் இந்த ஞானோதயம் ஏற்பட்டிருக்கின்றதென்றால்.....?
- திருகோணமலைக்கும், காங்கேசன்துறைக்குமிடையே பொதுமக்களின் பயணத்திற்கென ஏற்பாடு செய்யப்பட்ட ''லங்காராணி''யின் வெள்ளோட்டம் திடீரென ரத்துச் செய்யப்பட்டு விட்டது!
- ★ கப்பலோட்டிய தமிழனின் பரம்பரை, கப்பலையே காணாத பரம்பரையாகிக் கொண்டிருக்கிறது!
- தாமதமாகவும், குறைந்த தொகையிலும் பாடப் புத்தகங்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்தபடியால் திருவுளச் சீட்டு மூலமே அவை மாணவர்களுக்கு வழங்கப்பட்டன!
- ★ புள்ளிகளையும் திருவுளச்சீட்டு மூலந்தான் வழங்குவார்களோ? எனக் கேட்கின்றார் ஒரு தந்தை!

14 கோரிக்கைகளை முன்வைத்து

வடக்கு - கிழக்கு ஆசிரியர் புதன்கிழமை போராட்டம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 2

வடக்கு — கிழக்கில் உள்ள பாடசாலைகளில் பணிபுரியும் அதிபர்கள், ஆசிரியர்கள் 14 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து எதிர்வரும் 5ஆம் திகதி புதன்கிழமை சுகயீன லீவுப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இந்தப் போராட்டத்துக்கு வடக்கு — கிழக்கு பொது ஆசிரியர் சங்கம், வடக்கு — கிழக்கு மாகாண தமிழர் ஆசிரியர் ஒன்றியம், இஸ்லாமிய ஆசிரியர் சங்கம், பட்டதாரிகள் ஆசிரியர் சங்கம், திருகோணமலை மாவட்ட ஆசிரியர் சங்கம், சுயாதீன ஆசிரியர் சங்கம் ஆகிய அமைப்புக்கள் ஆதரவு தெரிவித்துள்ளன.

முன் வைக்கப்பட்டுள்ள 14 அம்சக் கோரிக்கைகளில் சில வருமாறு:-

★ கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்பட்டு மாணவர்களுக்கு வழங்கப்படும் இலவசப் பாடப் புத்தகங்களில் காணப்படும் எழுத்துப் பிழைகளைத் திருத்தி வெளியிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

★ இலவச பாட நூல்கள் மாணவர்களுக்கு உரிய காலத்தில் கிடைப்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

★ யாழ்ப்பாணம், அம்பாறை போன்று ஏனைய மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கு ஆசிரிய நியமனம் உடனடியாக வழங்கப்படல் வேண்டும்.

★ கஷ்டப் பிரதேச ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு அவர்களின் புதிய சம்பளத் திட்டத்தில் வழங்கப்பட வேண்டும். (க-3)

சமய சந்திகளில்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 2

வண்ணை வடமேற்கு, ஆனைக்கோட்டை ஸ்ரீகண்ணகை அம்பாள் ஆலய கிராம பிரதக்ஷண திருக்குளிர்த்தி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு விஷேட பூசையுடன் ஆரம்பமாகும்.

கிராமபிரதக்ஷணத்தைத் தொடர்ந்து மறுநாள் திருக்குளிர்த்தியும் அன்னதானமும் நடைபெறும். (ஜ-15)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப்ரல் 2

நீர்வேலி கந்தசுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து 15 நாட்கள் நடைபெறும் இந்த உற்சவ நிகழ்வில் எதிர்வரும் 17 ஆம் திகதி இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும் (ஜ-15)

★ ★ ★

கொழும்புத்துறை, ஏப்ரல் 2

தொல்புரம் கொட்டடியம்பதி அருள்மிகு ஸ்ரீ ஆதி முத்துமாரி அம்மன் ஆலயத்திலும் கொழும்புத்துறை கிழக்கு அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம், கொழும்புத்துறை மணலியம்பதி அருள்மிகு ஸ்ரீ அம்மன், ஐயனார் ஆலயங்களிலும் நாளை காலை பங்குனி 3 ஆம் திங்கள் விசேட பொங்கல் வழிபாடுகள் நடைபெறும். (ஜ-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப்ரல் 2

வல்வை அருள்மிகுஸ்ரீமுத்துமாரியம்மன் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 15 நாள்கள் நடைபெறும் உற்சவங்களில் எதிர்வரும் 17ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும் 14ஆம் திகதி பூங்காவனமும் நடைபெறும். (ஜ - 15)

இறைச்சிக் கோழி விற்பனை

எம்மிடம் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு. தேவையானோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர்
நல்லூர் ப. நோ. கூ. சங்கம்.
(11608)

அறிவித்தல்

யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தவர்களாக இருந்து, முழுப்பங்கையும் செலுத்தியவர்கள் UNHCR உதவித்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் சுழற்சிமுறைக்கடன் பெற வாய்ப்பு உள்ளது. இது பற்றிய விவரங்களையும் விண்ணப்பப் படிவத்தையும் சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கடன் விண்ணப்பங்களை 20 — 04 — 2000 ஆம் திகதிக்குப் பிந்தாது ஒப்படைக்கவும்.

பொது முகாமையாளர்
யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.
(சி/11614)

மானிப்பாய் வட்டம்
லயன்ஸ் கழகம்
யாழ். போதனா வைத்தியசாலை
கண் சத்திர சிகிச்சை நிபுணர்
வைத்திய கலாநிதி S. ரூகதாசன்
அவர்களை

இணுவில் லயன்ஸ்கழக அங்குரார்ப்பண வைபவத்தில்
வாழ்த்திக் கௌரவிக்கும் நிகழ்வு

காலம்: 02-04-2000 ஞாயிற்றுக்கிழமை
பி.ப. 12.30 (இ.நே.)

இடம்: இணுவில் மத்திய கல்லூரி
(ஆரம்பப் பிரிவு)

பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பவர்:
சிவத்தமிழ்ச் செல்வி
கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்.

வாழ்த்துப்பா வழங்குபவர்:
கவிமாமணி N. வீரமணி ஐயர் அவர்கள்.

கடந்த ஒன்பது மாத காலத்துக்குள் வலி மேற்கு, வலி. தென்மேற்கு, வலி. தெற்கு, வலி. வடக்கு பிரதேசங்களில் நடத்தப்பட்ட முகாம்களில் தேர்வு செய்த கண் பார்வை பாதிப்புள்ள 1513 நலிவுற்ற மக்களுக்கு மனிதாபிமானத்துடன் இலவச சத்திர சிகிச்சை செய்து பார்வை அளித்த கண் சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி S. ரூகதாசன் அவர்களை வரவேற்று வாழ்த்துவதில் மானிப்பாய் வட்ட இணுவில் லயன்ஸ் கழக உறுப்பினர்கள் பெருமை அடைகின்றனர்.

"சேவை செய்வோம்"
மானிப்பாய் வட்டம்
இணுவில் லயன்ஸ் கழகங்கள்.

வாழ்த்துவதில் இணையும்:
லயன் S. S. தங்கராஜா
மாவட்டத் தலைவர் - மாவட்டம் 306B3
(முன்னாள் தலைவர், ஆலோசகர்-வடபிராந்தியம்)
(சி/11612)

31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் சின்னத்தம்பி நாகலிங்கம்
(ஆசிரியமணி)

பூ மலர்வு 23 - 08 - 1910 பூ விடுகை 02 - 03 - 2000

அன்பும் கருணையும் அருங்குணம் பலவும் கொண்டே குடும்பம் சிறந்திடக் காத்த எங்கள் குலத்தின் தெய்வமே! உங்களை என்றும் மனமெனும் கோயிலில் வைத்துள்ளோம்.

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இல. 39, MPCS லேன், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம். (75006)

மரண அறிவித்தல்கள்

திருமதி தங்கம்மா கிருஷ்ணசாமி
(ஓய்வுபெற்ற ஆசிரியை,
யா / வல்வை சிவகுரு வித்தியாசாலை)

திருமதி தங்கம்மா கிருஷ்ணசாமி அவர்கள் வெள்ளிக்கிழமை (31 - 3 - 2000) அன்று காலமானார்.

அன்னார் திரு. கிருஷ்ணசாமியின் (ஓய்வுபெற்ற லிகிதர், உடுப்பிட்டி M.P.C.S.) அன்பு மனைவியும் மீரா (நோர்வே), அனுஷியா (உடற்கல்வி டிப்ளோமா 2 ஆம் வருடம், யாழ். பல்கலைக்கழகம்), பிரியதர்சினி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவகுமார் (நோர்வே), சாந்தமூர்த்தி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் திவ்யா, இலக்கியா, கிரிஷாணி, பவிஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் திருமதி தங்கமணி மகேஸ்வரனின் (ஓய்வு பெற்ற ஆசிரியை உடுப்பிட்டி மகளிர் கல்லூரி) அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (02.04.2000) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கரம்பவாளி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவாக ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
திரு. சி. கிருஷ்ணசாமி
(கணவன்)

'தங்க பவனம்'
உடுப்பிட்டி.
(75000)

கனகசபை நமசிவாயம்

கோலாலம்பூரைச் சேர்ந்த கனகசபை நமசிவாயம் (29-03-2000) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை (புகையிரத YARD Forman), சிவக்கொழுந்து தம்பதிகளின் பாசமிகு கனிஷ்ட புதல்வனும் கமலாம்பிகை, சண்முகநாதன், சிவசுப்பிரமணியம், இரத்தினேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான கதிரவாலுப்பிள்ளை, இராமஜெயம் ஆகியோரின் பண்புமிகு மைத்துனரும் கணேசன், கணேஸ்வரி ஆகியோரின் ஆசைமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் (30-03-2000) வியாழக்கிழமை அன்று நடைபெற்றுப் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

திரு. சிவமயம்.

'ராம்ராஜ்',
சித்தன்கேணி.
(75005)

ஊழின் ஆற்றல், மனிதனின் ஆற்றல்; இந்த இரண்டில் வலிமையானது எது?

எஸ். ஆர். எஸ். தேவதாசன்

இவ்வுலகில் மனிதன் பிறக்கும்போதே பல்வகையான வேறுபாடு களமைந்த சூழ்நிலையில் பிறக்கின்றான். செல்வம் மிக்க பெற்றோரை ஒரு குழந்தையும் அன்றாடம் வயிற்றை நிரப்பவே வறுமையுள்ள பெற்றோரை இன்னொரு குழந்தையும் பெறுகின்றன. இருவருமே ஏதுமறியாப் பச்சைப் பாலகர்கள். என்றாலும் பிறந்த உடனேயே இவ்வேறுபாடுகளை அனுபவிக்கின்றனர். இதே போல உழைப்பின்றி உடல் வளர்ப்போர் சிலருக்குச் செல்வம் சேருகின்றது. நாள்தோறும்உடல் வருந்தி உழைக்கும் உழைப்பாளிக்கு உண்பதற்கே சரியான உணவு கிடைப்பதில்லை. இத்தகைய வேறுபாடுகள் மனித வாழ்வில் ஏன் காணப்படுகின்றன என்ற வினா இந்தியச் சிந்தனையாளர் மனதில் எழத் தொடங்கி அதற்கு விளக்கங்களையும் அளிக்க முற்பட்டனர்.

செயல் நல்லதாக இருப்பின் நன்மை கிட்டும். தீயதாக இருப்பின் தீமை வரும். ''முற்பகல் இன்னா செய்யின் பிற்பகல் தாமே வரும்'' என்பது வள்ளுவனார் வாக்கு. அத்துடன் ஊழ் என்னும் அதிகாரத்தில் ''ஊழிற்பெருவலி யாவுள மற்றொன்று சூழினுந் தான் முந்துறும்'' என்று குறித்துள்ளார்.

மனித வாழ்க்கையில் மிகுந்த வலிமையுடையதாக ஊழ் உள்ளது. நல்வினை விளையும்போது அகமகிழ்வது மனித இயல்பு. தீவினை விளையும்போது மட்டும் மக்கள் ஏன் துன்புற்றுக் கலங்க வேண்டும்? செய்த வினைப் பயன்களே மக்களை நாடி வருகின்றன. நல்வினையை விழைவது போலவே தீவினையையும் முகமலர்ந்து ஏற்றுக் கொள்ளும் உணர்வு வேண்டும். இராமபிரான் அரச பதவியை அடைந்தபோதும் அதனை இழந்து காட்டுக்கு நடந்தபோதும் ஒத்த சிந்தனையாயிருந்த சீரிய உள்ளத்தினை நன்கு வியக்காமல் இருக்க முடியாது. இது இன்ப துன்பத்தை ஒரு நிலையில்கற்கும்உயர்நெறியை எடுத்துக்காட்டுகின்றது. ஆக்கம், கேடு, வாழ்வு, சாவு, இன்பம், துன்பம் இவையாவும் உலகியல்பு என்பதை ஊழின் வழி வலியுறுத்துகிறார் வள்ளுவர். இந்த உள நிலை மன்பதைக்கு வாய்த்து விட்டால் உளத்துன்பம் உயிர்த்துன்பம் இல்லை எனலாம்.

விதியை மதியால் வெல்ல முடியாதா? ஊழின் ஆற்றல் மனித ஆற்றலைவிட வலிமை படைத்ததா? என்னும் எண்ணங்கள் நம்மிடையே தோன்றும். ஆற்று வெள்ளத்தில் போகும் படகு வெள்ளத்தின் போக்கில்தான் செல்லும். மனித வாழ்வும் ஊழின் போக்கில்தான் செல்கிறது. எல்லாவற்றுக்கும் ஊழ்தான் அடிப்படையானது. அதனால் மனிதர்கள் எதற்கும் முயற்சி செய்யாது சோம்பி இருத்தல் சரியானதா என்று வள்ளுவனார் வினவுகிறார். அதனால்தான் தெளிவாகவே வள்ளுவர் கூறிவிட்டார்:

''தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சிதன் மெய்வருந்தக் கூலி தரும்'' என்று.

கீதையின் நாயகன் கண்ணன் கற்பித்த கர்மயோகம் ''கடமையைச்செய், பலனை எதிர்பாராதே'' என்பதாகும். இந்த அரிய கருத்து குறளில் கிடப்பதை நல்ல தொரு பாரம்பரியத்தின் பெருமை என்றே கொள்ளுதல் வேண்டும்.

ஊழினைஉட்பக்கம் கண்டு, ஊழ் என்கின்ற பேயினை வென்று வாகை சூட வேண்டும் என்கின்ற பெரிய அறிவினை மனிதர்கள் பெற்றாக வேண்டும். ''முயற்சி..... முயற்சி'' என்னும் தாரக மந்திர ஒலியுடன் வாழ்வில் மக்கள் வெற்றிக் கனியைப் பெற்றாக வேண்டும்.

ஊழையும் உட்பக்கம் காண்பர் உலைவு இன்றித் தாழாது உஞற்றுபவர்'' என்பதும் அதனையே.

இடைவிடாத முயற்சி பற்றி பேச வந்த வள்ளுவனார் பல்வேறு கருத்துக்களைச் சொல்லி அதற்கு அரண் செய்கிறார்.

★ ஒருதொழிலைச் செய்து முடித்தல் கடினம் என்று அசந்து மனந் தளராதே, முயற்சி செய்.

★ செயலற்று இராதே. செயற்பட்டுக்கொண்டே இரு.

★ முயற்சி இல்லாதவன் உபகாரியாக இருத்தல் முடியாது.

★ முயற்சி திருவினையாக்கும். முயற்சி இல்லையேல் வறுமை தானே வந்துவிடும்.

★ சுற்றத்தார் பாரந் தாங்கி ஆழ்பவன் முயற்சி உடையவன்.

★ முயற்சியுடையான் மாட்டு திருமகள் வாசம்செய்வாள்.

★ முயற்சி தன் மெய்வருந்தக் கூலி தரும்.

★

பத்திரிகை ஆழிக்குள் படித்தெடுத்த முத்துக்கள்

கவிஞன் யார்?

1. யாவராலும் எடுத்துச் சொல்லப்படாத விஷயத்தை எல்லோருடைய உபயோகத்திற்காகவும் எவனொருவன் எடுத்துக் கூறுகிறானோ அவன் கவிஞன்.

2. கண்ணுக்குக் காணாமல் பூமியில் புதைந்து கிடக்கும் பொன், வைரம் முதலிய பொருள்களை வெளியில் கொணர்வதற்காக எப்படி ஒரு சுரங்கத் தொழிலாளி பூமியை ஆழமாகத் தோண்டுவானோ, அதைப்போல் இயற்கை என்னும் சுரங்கத்தில் புதைந்து கிடக்கும் அநேக நுண்ணிய பொருள்களை ஜனங்களுடைய நலனுக்காக எவன் மேலுக்குக் கொணர்ந்து காட்டுகிறானோ அவன் கவிஞன்.

3. மரணம் அடைவதற்காக பிறவாமல் வாழ்வதற்காகப் பிறந்திருப்பதாக எவனொருவன் கருதுகிறானோ அவன் கவிஞன்.

4. எவனொருவன் அழகைச் சிருஷ்டித்து அதற்குப் பெயரிட்டு அதன் பிரதிநிதியாக இருக்கிறானோ அவன் கவிஞன்.

5. ஞானி, கர்ம வீரன், உபதேசகன் ஆகிய மூன்று தன்மைகளும் எவனிடத்தில் ஒன்று சேர்ந்திருக்கின்றனவோ அவன் கவிஞன்.

6. சமுதாயத்தின் நோய்கள் இன்னவை என்று கண்டுபிடித்து அவைகளுக்குப் பரிகாரம் தேடிக்கொடுக்கிறவன் எவனோ அவன் கவிஞன்.

7. இறந்த கால ஏட்டில் நிகழ்கால எழுதுகோலைக் கொண்டு, வருங்காலத்தை எவனொருவன் எழுதுகிறானோ அவன் கவிஞன்.

8. எவனுடைய உணர்ச்சிகள் மற்றவர்களுடைய உணர்ச்சிகளைத் தூண்டும் கோல் போன்று இருக்கின்றனவோ அவன் கவிஞன்.

9. ஒருவனுடைய எலும்புகள் சாம்பலாகிக் காற்றில் பறந்துபோய் விடுகின்றன. அவனுடைய சவக்குழி கூடச் சூனியமாகி விடுகிறது. அவன் பிறந்த ஊர் தலைமுறை, ஜாதி முதலியனவும் மறைந்து போகின்றன. ஆயினும் அவன் பாடி வைத்துப் போன கவிதைகளை மட்டும் எல்லோரும் பாடிவருகிறார்கள். அப்படிப்பட்டவன் எவனோ அவன் கவிஞன்.

10. செல்வமும் அதிகாரமும் சேர்ந்து எவனொருவனை வாங்க முடியாதோ அவன் கவிஞன்.

வெ. சாமிநாதசர்மா
(மஞ்சரி) 1993 ஒக்ரோபர்.

வான் சிறப்பு

வான் சிறப்பு, கடவுள் வாழ்த்தைத் தொடர்ந்து திருக்குறளில் வருகிறது. இத்தொடர்ச்சி இரண்டுக்கும் உள்ள உறவை உணர்த்துவதாகும். மாற்றமனம் கடந்த கடவுள் இயற்கையை உடலாகக்கொண்டு உயிர்கட்கு காட்சி வழங்குவது. உடலாகிய இயற்கை தன் உயிராகிய கடவுளை உணர்தற்குக் கருவியாக நின்று துணைசெய்வது இவ்வியற்கைக் கூறுகளுள் சிறந்த ஒன்றாக மழையின் சிறப்பு ஓதப்பட்டது.

இறைவன் இயற்கை வாயிலாகவே உயிர்களுக்கு நலம் செய்கிறான். இயற்கை அன்னையுடன் கூடியுள்ளமையால் அவன் கருணையுடையவனாகிறான். அவனது கருணை மழையே உலகையோப்பி வருகிறது.

''தானே மழைபொழி தையலுமாநிற்பன்'' என வரும் திருமந்திரத்தின் நுட்பத்தை ஓர்க. இறைக்கும் மழைக்கும் உள்ள தொடர்பை உன்னுக இறைவனது கருணை மழையை வான்சிறப்பு விளக்கிறது.

இயற்கை கடவுளின் உடலாதலால் கடவுள் வாழ்த்துக்குப் பின் இயற்கையை வாழ்த்துவது அறம். அவ்வறம் இங்கு கடைப்பிடிக்கப்பட்டிருத்தல் காண்க. கடவுளுக்கு அடுத்த படியில் வான் சிறப்பு வைக்கப்பட்டிருக்கிறது. கடவுளைப் போல மழையும் உலகை ஓம்பி வருதலால். மழையில்லையேல் உலகம் ஏது? வாழ்வு ஏது? இதனாலேயே பல காரணம் பற்றியே ஆன்றோர் பலரும் மழையைச் சிறப்பித்துக் கூறலை ஒரு மரபாகக் கொண்டனர்.

மாமழை போற்றுதும்
மாமழை போற்றுதும் காம நீர்
வேலியுலகிற் கவனளிப்போன் மேனின்று
தான் சுரத்தலான் — சிலப்பதிகாரம் வாழ்த்து

பேரறிஞர் திரு. வி. கல்யாணசுந்தரமுதலியார்
(நவசக்தி— 28-05-1937)

தமிழ்ப் பண்பு

அறத்தின் வழி நிற்றல்
ஆண்மையில் உயர்தல்
இன்பத்தில் திளைத்தல்
ஈதலில் சிறத்தல்
உள்ளத்தில் தெண்ணியராதல்
ஊக்கத்தில் தளராதிருத்தல்
எவரையும் தமராய்க் கொள்ளுதல்
ஏற்றத் தாழ்வின்றி வாழ்தல்
ஐயந்திரிபறப்பேசுதல்
ஒழுக்கத்தைக் காத்தல்
ஓரஞ்சாராது நிற்றல்
ஔவியந்தனை அகற்றல்.

கி. அ. பெ. விசுவநாதம்
(மில்கவைற் செய்தி 1. 1. 1954)

கண்டெடுத்து வழங்குபவர்:
கலைப்பேரரசு ஏ. ரீ. பொன்னுத்துரை

எல்லோரும் போற்றிப் புகழ்ந்த சிறந்த சட்டத்தரணி 'எம். கே.'

வட்டுக்கோட்டையில் 'S. R.' என்றால் கனகநாயகம்அவர்களையும்'V.N.' என்றால்நாகலிங்கம் அவர்களையும்எம். கே. என்றால் சுப்பிரமணியம் அவர்களையும் குறிக்கும். அவர் அண்மையில் ஆயிரம் பிறை கண்டு அமரரானார்.

61 ஆண்டுகள் சட்டத்தரணியாகிப் பதினாறாயிரம் உறுதிகளைக் காணிக்கச்சேரிகளில் பதிவு செய்தவர்; தமிழ்க் காங்கிரஸ் வேட்பாளர்; சமயவாதி; சமூக சேவையாளர்; அவரை அனைவரும் ஈழத்து 'வினோபா' என அழைப்பார்கள். தூய வெண்ணிற ஆடை, சந்தனத் திலகம் நிமிர்ந்தநடை, வயதைக்காட்டாதபொலிவு, சரி எனப்பட்டதை அஞ்சாமல் சொல்லும்—செய்யும், ஆற்றல் படைத்தவர். நல்லவர்—வல்லவர்—ஆன்ம பலம் மிக்கவர்.

அவர் சித்தன்கேணி சிவன் கோயில், பிள்ளையார் கோயில், அடைக்கலந் தோட்டம் கந்தசாமியார் ஆலயம் போன்றவற்றின் தலைவராகப் பணி செய்தவர். மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை, யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், சித்தன்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாலயம் போன்றவற்றின் வளர்ச்சிக்காக நன்கு உழைத்தவர். தன் சமூகம், சூழல் இனத்தவரின் நன்மைக்காகப் பல உதவிகள் புரிந்தவர். எல்லோரும் ஊரைவிட்டு ஓடிய போதும் இரண்டு முறையும் இடம் பெயராமல் 'ஆத்ம பலத்தோடு' தன் கிராமத்திலேயே கடவுள் காப்பார் எனத் தங்கிவிட்டவர். முதுமையிலும் இளமை வேகத்தோடு சமூகசேவை ஆற்றியவர். இளையவர்கள் கூறுகின்ற நீதியான நற் கருத்துக்களைத் தட்டிக்கழிக்காமற் செயற்படுத்தும் திறமைசாலி. அவர் எழுதிய உறுதிகளை அப்பழுக்கற்றமுறையில் குறைகூறாமல் முடித்துக் கொடுப்பார்.

வட்டுக்கோட்டைக் கிராமம் மூத்த சட்டத்தரணியை இழந்துவிட்டது. 'நெஞ்சநல் உளனொருவன் இன்றிலன் எனும் பெருமை' உலகப் பெருமையாகும். அவர் வாழ்வு பூரணமான நல் வாழ்வு, அன்னாரின் ஆன்மா இறை நிழலின்புற்றிருப்பதாக!

- சங்கரத்தையூர்
சி. சுபாநாதன் -

நீத்தார் நயப்புரை

சின்னஞ்சிறு விளம்பரம்

தவறிவிட்டது

பருத்தித்துறை மாதனையைச் சேர்ந்த இராசதுரை நேசராசா என்பவரது தேசிய அடையாள அட்டை (673060455 V), விசேட அ. அட்டை, பருத்தித்துறை பிரிசேட் "பாஸ்" என்பன 29-03-2000 அன்று நீர்வேலியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து நீர்வேலி வடக்கில் உள்ள "ராஜ மணிப்பந்தல்" சேவையினரிடம் ஒப்படைத்துதவவும். (74988)

இறைச்சிக் கோழிகள்

Broilers, Cullbirds இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் பெற்றுக் கொள்ளலாம். நியாயமான விலை, நுட்பமான நிறுவை. 19. முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச்சந்தையடி, நல்லூர். (74887)

இறைச்சிக்கோழி (Broiler) மற்றும் கல்பேட்ஸ், சேவல், விறாத்துக்குஞ்சு என்பன மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குஉண்டு. தினமும்சுத்தம்செய்துகொடுக்கப்படும். தொடர்பு:இல.68, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். (74892)

இறைச்சிக்கோழி(Broiler), கல்பேட்ஸ் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: இல. 15, 6 ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (சின்னக்கடை அருகில்). (74897)

இறைச்சிக்கோழிகள் (Broilers) விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல. 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (74948)

குறைந்த விலையில் சகல நிறைகளிலும் தினமும் புறொயிலர் இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு. 54/2, சந்தனமாதா கோயில் முன் ஒழுங்கை, கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம் அல்லது 217A, ஆஸ்பத்திரி வீதி, (மூலனைச் சந்தி) யாழ்ப்பாணம். (75001)

வீடு விற்பனைக்கு

இலக்கம் 10, கைவேலி வீதி, நல்லூரில் 6 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம் — கொழும்பு 723570— தரகர் மூலமான தொடர்பு தேவையில்லை. (சி/11600)

இல. 24, வித்தானையார் வீதி, சுண்டுக்குளியில் 2½ பரப்புக்காணியில் 5 அறைகளோடு சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: திரு. சாமுவேல் மத்தியூஸ். இல. 57, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். (74957)

O/L கணிதம் 2000

உங்கள் வீடுகளுக்கு வந்து O/L முதல் தரம் 5 வரை கணித பாடத்திட்டத்திலிருந்து Paper வரை மிகத்துல்லியமாகக் கற்பிக்கப்படும். ஒரு மணித்தியாலத்துக்கு 50/- தொடர்பு: ஆசிரியர் சங்கர், 37, வேம்படி றோட், யாழ்ப்பாணம். (74979)

நாற்றுகள் விற்பனை

நல்ல இன தக்காளி, கத்தரி, கறிமிளகாய் நாற்றுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: அறுவடி கைதடி நுணாவில், சாவகச்சேரி. (74973)

புறொயிலர்

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும். குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். லக்கி மதவடி ஒழுங்கை, திருநெல்வேலி. (74958)

புறொயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு. சுத்தம் செய்தல் இலவசம். இல. 31, மான் பாடசாலை வீதி, உடுவில் கன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரர் வளவு) (74664)

காணவில்லை

இல. 29, காரைக்காட்டு வீதி, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம் எனும் முகவரி கொண்ட வீட்டின் முன் நிறுத்தி வைக்கப்பட்ட (J- 014380 இலக்கம் கொண்ட ஆண்களுக்கானதுமாலா துவிச்சக்கர வண்டி ஒன்று 29-03-2000 முற்பகல் 9மணியளவில் காணாமல் போய் விட்டது. தயவு செய்து மேற்படி துவிச்சக்கர வண்டி விற்பனைக்கு வந்தால் அல்லது அடையாளங் காணப்பட்டால் உடன் மேற்படி முகவரியில் அல்லது இல. 21-3432 தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும். (74968)

ஆங்கிலம் விசேடமாக

O/L, A/L Credits - Distinction பெறுபேறடையவும் Paper Class, G.A.Q, பட்டப்படிப்பு (Spoken English உட்பட) கற்பிக்கப்படும். ஆசிரியர், B.Sc. (Ceylon) Inter, 85, சிவன் கோயிலடி (சிவன் கோயில் பின்புறம்), திருநெல்வேலி. (74967)

பொய்யாமொழி ஜோதிடம்

தொழில் பிரச்சினை, கல்வித்தடை, விவாகத்தடை தீர ஆலோசனை வழங்கப்படும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். சாதகத்துடன் வரவும். ஞாயிற்றுக்கிழமைகளில் மல்லாகம் பழம் பிள்ளையார் கோயில் மடத்திலும் சனி, செவ்வாய்க் கிழமைகளில் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோயிலடி, 140, பருத்தித்துறை வீதி, நல்லூரிலும் சந்திக்கலாம். (74915)

விற்பனைக்கு

1½ மாதம் கறுப்பு, வெள்ளை, பிறவுண் பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு தொடர்பு: "அழகு நிலா", அரசடி வீதி, (வதிரிச் சந்திக்கு அருகில்). நெல்லியடி. (74989)

புதிய பாலை, முதிரை நிலைகள், வன்னல்கள் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்: பூங்கனிச் சோலை, இராமலிங்கம் வீதி, முடமாவடி, யாழ்ப்பாணம். தொ. பேசி இல. 2976. (75004)

காணி விற்பனைக்கு

நாவலர் வீதி, பலாலி வீதிச் சந்தியில் (இலுப்பையடி) 1½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கொழும்புத் தொலைபேசி இலக்கம் - 723570 தரகர் தேவையில்லை. (சி/11599)

மணமக்கள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த செவ்வாய் தோஷமற்ற பாவம் குறைந்த 40 வயது போதனாசிரியருக்கும், 28 வயது செவ்வாய் தோஷமற்ற சகோதரிக்கும் பெற்றோர் பொருத்தமான மணமக்களைத் தேடுகின்றனர். தொடர்பு: கே. கமலா C/o சு. விஜயகுமார், அரசடி ஒழுங்கை, புலோலி கிழக்கு, பருத்தித்துறை. (74870)

மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 24 வயது ரேவதி நட்சத்திரம் 8 இல் செவ்வாயுள்ள படித்த மணமகளுக்கு கனடாவில் உயர்ந்த பதவியிலுள்ள (எஞ்சினியர், எக்கவுண்டன்) மணமகனைத் தேடுகிறார்கள். மணமகன் அங்கு பிரஜா உரிமை பெற்றவராக இருக்க வேண்டும். தொடர்பு: செ. விஜயரெத்தினம், நகுலி கிழக்கு, மானிப்பாய். (ஆனைக்கோட்டை முத்தனார் கோயிலடி) (74994)

கோழித்தீன் விற்பனைக்கு

Prima கோழித்தீன் மூடையாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர்-வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (74998)

குடும்ப சுகாதார அலுவலர் வெற்றிடம் நிரப்பக் கோரிக்கை

தரம் ஒன்றில் உள்ள குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கு மேற்பார்வை குடும்ப சுகாதார சேவை உத்தியோகத் தர்களுக்கான பயிற்சியை வழங்கி தற்போதுள்ள வெற்றிடங்களை நிரப்ப வேண்டும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்று கடந்த 26 ஆம் திகதி நடைபெற்ற அரசாங்க குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் சங்க யாழ். கிளையின் செயற்குழுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சங்கத்தலைவி திருமதி எம். ஜே. பி. இராசதுரை தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் —

தரம் ஒன்றில் உள்ளவர்களின் சிருடை விடயமாகவும் தரம் 11 'ஏ'யில் உள்ளவர்களுக்கு வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை நடத்தி ஒரு வருட காலமாகியும் இதுவரை அதன் பெறுபேறுகள் கிடைக்காமல் இருப்பது குறித்தும் யாழ். சுகாதார சேவைப் பிரதி மாகாணப் பணிப்பாளருடன் தொடர்பு கொள்வது என்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-135)

போட்டித் திகதி நீடிப்பு

'நியந்த்ரீ'

ஸசவகமய, வைதீக அறிவுப் போட்டிகளுக்கான முடிவு திகதி 15-04-2000 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

செயலாளர்
நியந்த்ரீ

சென் கோயில்,
நல்லூர். (சி/11607)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

மீன்பிடியியல் டிப்ளோமா கற்கைநெறி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மேற்படி கற்கைநெறிக்குப் பதிவுசெய்ய விரும்பும் தகுதி வாய்ந்தோரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

தேவையான தகைமைகள்:-

1. ஒரே தடவையில் க. பொ. த. (உ/த) பரீட்சையில் 180 புள்ளிகள் பெற்றுப் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதியுடைய சகல மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.
2. தேர்வுக்கு நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

03. கற்கை நெறிக்குரிய கட்டணம்:-

பதிவுக்கட்டணம்	ரூ.	250.00
கற்கை நெறிக் கட்டணம்	ரூ.	5000.00
பரீட்சைக் கட்டணம்	ரூ.	750.00
நூலக வைப்பு (மீளப்பெறக்கூடியது)	ரூ.	500.00
ஆய்வுகூட வைப்பு (மீளப்பெறக்கூடியது)	ரூ.	500.00
மொத்தம்	ரூ.	7,000.00

கட்டணங்கள்முற்பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

காலம்:- ஒருவருடம்; உள்வாரி - முழுநேரம்

விண்ணப்பப் படிவங்கள், பதில் பதிவாளர்/பரீட்சைகள் & அனுமதிகள் கிளை. யாழ். பல்கலைக்கழகம் எனும் முகவரியிலிருந்து 50/- செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவங்கள் இணைப்பாளர்/ கடல்வள அபிவிருத்தி நிலையம், யாழ். பல்கலைக்கழகம் எனும் முகவரியில்2000-05-12 அன்று அல்லது அதற்கு முன்னராக ஒப்படைக்கப்பட வேண்டும்.

கற்கைநெறி 2000-8-2 அன்று தொடங்குவதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம். (சி/11603)

ஈராண்டு நினைவஞ்சலி

அமரர் கதிரவேலு பாலசிங்கம்
(குஞ்சன்)

(வ. கி. தென்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க முன்னாள் காவலாளி)

பிறப்பு: 19 — 02 — 1954 இறப்பு: 26 — 03 — 1998

அன்பாலும் பண்பாலும் வளர்த்தெம்மை
கண் போலக் காத்திட்ட அப்பாவே!
எம்மோடு என்றுமிருப்பீர் என்று இருந்தோம்
எங்கள் அப்பாவே! எங்கு சென்றீர்?
தங்களை நாம் காணாது தவிக்கின்றோம்.
தங்கள் ஆத்மா சாந்தியடைய இங்கு நித்தம்
இறைவனை வேண்டுகின்றோம்.

— குடும்பத்தினர்

தோப்பு, அச்சுவேலி. (சி/11611)

பயங்கரவாதிகள் என்ற பெயரில் தமிழர்கள் துன்புறுத்தப்படுவதை தடுத்து நிறுத்துங்கள்

இந்துமாமன்றம் ஜனாதிபதிக்கு அவசர கடிதம்

கொழும்பு, ஏப்ரல் 2

தமிழர்கள்பயங்கரவாதிகள் என்ற அடிப்படையில் துன்புறுத்தப்படும் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. இவற்றை நிறுத்த உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அகில இலங்கை இந்துமாமன்றம், ஜனாதிபதியிடம் மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளது.

அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

குறிப்பாகக் கொழும்பு நகரத்திலும் பொதுவாக நாட்டின் பல பகுதிகளிலும் பல வழிகளில் துரதிர்ஷ்டவசமாகப் பரவிக் கொண்டிருக்கும் இனவாதப் போக்கான செயல்களைத் தங்கள் அவசியமான கவனத்திற்குச் சமர்ப்பிக்க விரும்புகின்றோம்.

தமிழர்கள் பயங்கரவாதிகள் என்ற அடிப்படையில் துன்புறுத்தப்படும் சம்பவங்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. பின்வரும் சம்பவங்களைக் குறிப்பாகச்சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

எம். கோபிகிருஷ்ணாஎன்ற கொழும்பு இந்துக் கல்லூரி (பம்பலப்பிட்டி) மாணவன் நீர் கொழும்பில் இருந்து ரயிலில் பிரயாணம் செய்யும் பொழுது புத்தகப் பையில் குண்டு கொண்டு செல்கிறாரென்ற பொய்க் குற்றச்சாட்டை அவர்மீது சுமத்திச் சில சிங்களப் பிரயாணிகள் அவரைத்தாக்கி ஓடிக்கொண்டிருக்கும் புகை வண்டியில் இருந்து வெளியே தள்ளி விழத்தினர். அத்தோடு சிங்களப் பிரயாணிகளால் அவர் இனவாத அடிப்படையில் அவதூறு செய்யப்பட்டார்.

வேறொரு சம்பவத்தில் புத்தளத்திலிருந்து கொழும்பு நோக்கி வந்த புகைவண்டியில் பிரயாணம் செய்த தமிழர் இனவாத அடிப்படையில் துன்புறுத்தப்பட்டனர்.

இங்கிரியாவில் ஓர் இந்து மதகுரு பேருந்தைப் பிடிப்பதற்கு ஓடிச்சென்ற பொழுது சிலரால் பிடிக்கப்பட்டுக் காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டார்.

மற்றுமொரு சம்பவத்தில் மொறட்டுவவில் இருந்து புறக்கோட்டைக்குச் சென்று கொண்டிருந்த தனியார் பேருந்து ஒன்றில் பிரயாணம செய்த ஒரு தமிழ்ப் பிரயாணி தமிழன் என்ற காரணத்துக்காக பேருந்து நடத்துனரால் வெள்ளவத்தையில் பேருந்துக்குவெளியே தள்ளப்பட்டார்.

கொழும்பு கொம்பனி வீதியில் ஒரு பெண் உடுத்தியிருந்த உடுப்பைக் கழற்றுமாறு பணிக்கப்பட்டார். இது அதிகாரிகளினால் மறுக்கப்பட்ட போதிலும் மார்ச் 26 ஆம் திகதிய 'ரைம்ஸ்' ஞாயிறு இதழ் உண்மையை வெளிப்படுத்தியிருந்தது. பிடிபட்டவர் ஒரு சிங்களப்பெண் ஆவார். ஆனால் அவள் ஒரு தமிழ்ப் பயங்கரவாதி என்ச் சந்தேகிக்கப்பட்டார் என்று செய்திகள் குறிப்பிடுகின்றன இந்தத் துரதிர்ஷ்டவசமான சம்பவம் ஒரு ஜனநாயக நாட்டில் பெண்களுக்கு — குறிப்பாக தமிழ்ப் பெண்களுக்கு — நிலவும் பாதுகாப்பு இன்மையைப் புலப்படுத்துகின்றது.

கடந்த 27ஆம் திகதி சிரேஷ்ட தமிழ்ப் பிரமுகர் ஒருவர் வெள்ளவத்தை றொக்ஸி படமாளிகைக்கு அண்மையில் உள்ள பத்திரிகைக் கடையில் தமிழ்ப் பத்திரிகை ஒன்றை வாசித்துக் கொண்டிருந்த போது அங்கு வந்த இனந்தெரியாத மூவரால் தாக்கப்பட்டு பத்திரிகையும் கிழிந்து எறியப்பட்டதுடன் இனவாத வார்த்தை கவினாலும் ஏசப்பட்டார்.

பல்லாண்டு காலமாக தடைபெற்றுக்கொண்டிருக்கும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் நோக்குடன் தாங்களும ஏதிர்க்கட்சித் தலைவரும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் தமிழர்கள் பழிபடும் வகையில் இந்த வகையான இனவிரோதச்செயல்கள் தொடர்வதுதுர் அதிர்ஷ்டவசமானது.

இனவிரோதம்

இந்த இனவிரோதங்களினால்தான் இந்த நாட்டில் மாறி மாறிவந்த அரசாங்கங்களினால் தமிழர்கள் நம்பிக்கை இழந்துள்ளனர். இந்தவகையான இனவாதச் சம்பவங்களை நிறுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு தங்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பிட்ட சகல சம்பவங்களும் தமிழ்த் தினசரிகளான வீரகேசரி, தினக்குரல், தினகரன் ஆகிய பத்திரிகைகளில் வெளி வந்துள்ளன.

ஊடகங்களும் இந்தத் துரதிர்ஷ்ட வசமான போக்குக்குப் பங்களிப்புச் செய்து கொண்டிருக்கின்றன என்பதையும் தங்கள் கவனத்துக்குத் தருகிறோம்.

ஆங்கில, சிங்கள ஊடகங்கள் தமிழ்மக்களின் அவலங்களை வெளிப்படுத்துவதை விலக்கிக் கொள்கின்றன. இந்த நிலை தொடர்ந்தால் சிங்கள மக்கள் தமிழர்களின் நிலையை அறிவதற்கு வாய்ப்பு இல்லை. தங்கள் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள ஏரிக்கரை ஆங்கில, சிங்கள வெளியீடுகள் கூட இந்தக் கடமையில் இருந்து தவறியுள்ளன என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம். ஏரிக்கரைத் தமிழ் வெளியீடான தினகரன் கடந்த 27 ஆம் திகதிய ஞாயிறு இதழின் பிரதம ஆசிரியரின் ஆக்கபூர்வமான கருத்துக்களை மெச்சிப் புகழ்கின்றோம். இதில் மேலே சொல்லப்பட்ட சில சம்பவங்களை அவர் வெளிப்படுத்தி இருப்பதோடு அரசியல் தீர்வைத் தமிழ் மக்கள் முன் சமர்ப்பிப்பதற்கு முன் அவர்களது நம்பிக்கையைப் பெற வேண்டும் எனவும் அவர்களை இழிவுபடுத்தும் செயல்கள் நிறுத்தப்படவேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

கோயில்கள் குறித்து விவரம்

இந்துக் கோயில்களுக்கு நடந்தவை பற்றிக் கடந்த மார்ச் 23 ஆம் திகதி தங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட மகஜர் தினகரன் பத்திரிகையில் ஒழுங்காகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது. 'டெய்லி நியூஸ்' அல்லது 'ஒப்சேவர்' பத்திரிகைகளுக்கும் நாங்கள் மகஜரின் பிரதிகளை அனுப்பியிருந்தபோதிலும் ஏன் பிரசுரிக்கவில்லை? தனிப்பட்ட ஊடகங்கள்கூட இனத்துவேசமான அதே கொள்கையைப் பின்பற்றுகின்றன. தமிழர் மீதான இனரீதியான தாக்குதலை நிறுத்துவதற்கும் அவர்கள் இந்த நாட்டின் பிரசைகளாகச் சம உரிமைகளுடனும் சுதந்திரமாக வாழமுடியுமென்று உணரக்கூடிய வகையில் உடனடி நடவடிக்கையை எடுக்குமாறு தங்களையும் கௌரவ தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சரையும் ஊடகங்களையும் தயவாகக் கேட்டுக்கொள்கின்றேன். இவற்றிற்குரிய நடவடிக்கை எடுக்கும் வண்ணம் தங்களைத்தூண்டுவார் என்ற நம்பிக்கையில் எதிர்க்கட்சித் தலைவருக்கும் இந்தக் கடிதத்தின் பிரதி ஒன்று அனுப்புகின்றோம், ஏனைய அரசியற் கட்சித் தலைவர்களுக்கும் இதன் பிரதிகள் அனுப்பப்படுகின்றன. அனைவரினதும் ஒத்துழைப்புடன் தங்கள் அரசாங்கம் இது விடயமாக அர்த்தபுஷ்டியான நடவடிக்கை எடுக்குமென நம்புகின்றோம்— என்றுள்ளது.

(ஐ-க-9)

நிவாரணம் விநியோகம்

கொழும்புத்துறை, எப்ரல் 2

புதுவருட தினத்தை முன்னிட்டு யாழ். பிரதேச செயலாளர் பிரிவில் 78 ஏ. பி. புள்ளிகளுக்கான எப்ரல் மாதத்திற்குரிய இலவச நிவாரணம் நாளை திங்கட்கிழமை யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் வழங்கப்படவுள்ளது.

நிவாரணத்துக்கு சிவப்பு நாட்டரிசி, பச்சை அரிசி, சீனி, மைசூர்ப் பருப்பு, ஹைலண்ட் பால்மா ஆகியன வழங்கப்படவுள்ளதாக யாழ். பிரதேச செயலாளர் பா. செந்தில்நந்தனன் தெரிவித்துள்ளார். (ஐ-30)

இலங்கைக் கலைக்கழகத்தின்

கர்நாடக சங்கீத பரத நாட்டியக் குழு

நடத்தும்

கர்நாடக சங்கீத, பரத நாட்டிய வினா விடைப் போட்டிகள்

கர்நாடக சங்கீத, பரத நாட்டியக் குழு இத்துறைகளில் ஆர்வமுள்ளவர்களின் ஈடுபாட்டினையும் ஆற்றல்களையும் வளர்க்கும் முகமாக கர்நாடக சங்கீத, பரத நாட்டிய வினா விடைப் போட்டிகளை நடத்தத் தீர்மானித்துள்ளது.

போட்டி விதிமுறைகள்:

01. 15 வயதுக்கும் 25 வயதுக்கும் உட்பட்ட ஆண், பெண் இரு பாலாரும் இப்போட்டிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.
02. பாடசாலை மாணவர்களும் இப் போட்டிகளில் பங்குபற்றலாம்.
03. இப்போட்டிகள் மேற்கூறிய துறைகளில் இரு சுற்றுக்களாகக் கொழும்பில் இடம்பெறும்.
04. கூடுதலாக சரியான விடையளிக்கின்றவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும்.
05. நடுவரின் முடிவே இறுதித் தீர்ப்பாகும்.

கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தைப் போன்று தாமே தயாரித்து (ஏ4 அளவுத் தாளில்) கீழ்க்கண்ட முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய இறுதித் தினம் 15-05-2000. விண்ணப்பங்களை அனுப்புவோர் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் கர்நாடக சங்கீத / பரத நாட்டிய வினாவிடைப் போட்டிகள் - 2000 எனக் குறிப்பிட வேண்டும்.

முகவரி: செயலாளர்,
கர்நாடக சங்கீத பரதநாட்டியக்குழு,
98, வோட் பிளேஸ்,
கொழும்பு - 07.

கலாசூரி அருந்ததி ஸ்ரீரங்கநாதன்
தலைவர்,
கர்நாடக சங்கீத, பரதநாட்டியக்குழு.

02-04-2000

கர்நாடக சங்கீத, பரதநாட்டிய வினா விடைப்போட்டிகள்-2000

மாதிரி விண்ணப்பப் படிவம்

1. விண்ணப்பதாரியின் முழுப் பெயர்:-
.....
2. விண்ணப்பிக்கும் துறை:- கர்நாடக சங்கீத வினா விடைப்போட்டி / பரதநாட்டிய வினா விடைப்போட்டி
(கடிதத்தின் மேலுறையின் இடது பக்கத்தில் குறிப்பிடுதல் வேண்டும்)
3. முகவரி:-.....
.....
4. தொலைபேசி இருப்பின் இலக்கம்:-.....
5. வயது:-.....
வருடம்..... மாதம்..... திகதி .....
(பிறப்புச்சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)
6. குறிப்பிட்ட துறையில் அதியுயர் தகைமை:-
.....
.....
.....
.....
.....

திகதி:-

.....
விண்ணப்பதாரரின் கையொப்பம்

(சி/11507)

60 ஆவது அகவை நிறைவு

திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

யா/விட்டத்தற்பளை கமலாசனி வித்தி. உதவி அதிபர்

24-01-1972 இல் ஆசிரிய பணியில் இணைந்த இவர் நு/கவறவில த. வித்தியாலய ஆசிரியராகவும் அதிபராகவும் 01-05-1986 முதல் இந்தப் பாடசாலையின் ஆசிரியராகவும் உதவி அதிபராகவும் தமது பணியை நல்லாசிரியர் வரிசையில் சிறப்புடன் ஆற்றியுள்ளார். இன்று இவர் தமது 60 ஆவது அகவையை நிறைவு செய்து 02-04-2000 இல் ஓய்வு பெறுகின்றார்.

இவரது ஓய்வு காலம் சிறப்பாயமைய வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

(74980)

MS Office 97

புதிய பிரிவு மே மாதம் ஆரம்பமாகின்றது.
விண்ணப்ப முடிவு திகதி:
12 - 04 - 2000.

GKM கணனிப் பிரிவு

ஞானசம்பந்தர் கலைமன்றம்,
பருத்தித்துறை. (பி/18158)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்: 15 — 07 — 1931

மறைவு: 03 — 03 — 2000

திருமதி பவளம் செல்லத்தம்பி

திதி: 02. 04. 2000

''அன்னையே அவனியில்-நீ
தோன்றி எமக்கெல்லாம்
ஆறுதல் தந்தாய்-இன்று
எம்மை எல்லாம் தவிக்க விட்டு
ஆண்டவன் அடிசேர்ந்தாயோ?
தவிக்கின்றோம் உன் பிரிவால்
ஆறுதல் தர ஓடிவாராயோ?''

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

05. 03. 2000 அன்று எமது அன்புக்குரிய மனைவி, தாயார் அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்து எமக்கு ஆறுதல் கூறி, கண்ணீர் அஞ்சலிகள் வழங்கி, உதவிகள் செய்த அனைவருக்கும் நன்றிகள் உரித்தாகுக.

உங்கள் பிரிவால் துயருறும்
கணவர் மு. செல்லத்தம்பி
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

63, சங்கிலியன் வீதி,
நல்லூர். (74879)

கும்பாபிஷேக தினம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 3

தலைத்திரு முருகேசு சுவாமிகள் தொண்டமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயப் புனரமைப்பை முன்னின்று நடத்திய வகையில் வரும் கும்பாபிஷேக தினம் எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் ஆலயத்தில் விஷேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறுவதுடன் சந்நிதியான் ஆச்சிரமத்தில் அறுபத்துமூவர் குருபூசையும் இடம்பெறும்

(ஐ—ந)

திருவாசக முற்றோதல்

கொழும்புத்துறை, ஏப்ரல் 2

யாழ். சிவதொண்டன் நிலையத்தின் ஏற்பாட்டில் இங்குள்ள ஸ்ரீ யோகர்சுவாமி கோயிலில் இடம்பெறும் திருவாசக முற்றோதல் நிகழ்வில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.15 மணி தொடக்கம் 12 மணி வரை நாடு நலம்பெற, மக்கள் மன நிம்மதியுடன் வாழ இறை ஆசி வேண்டி விசேடயாகம், பூசை, ஆராதனை, வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் சுவாமிகளின் நற்சிந்தனை, பஜனை, கூட்டுப் பிரார்த்தனைப் பாடல்கள் என்பனவும்இடம்பெறும்.

(ஐ-30)

விற்பனைக்கு

வியாபார ஸ்தாபனங்களுக்கும் வீட்டுப் பாவனைக்கும் உகந்த இரும்புப் பெட்டிகள் (IRON-SAFES) பல வித அளவுகளிலும் விற்பனைக்கு இருக்கின்றன.

தொடர்பு:-
இரும்புப் பெட்டித் தொழிலகம்,
இல. 13, பிறவுன் வீதி
யாழ்ப்பாணம்.
(74966)

மக்கள் முகம்

மானிப்பாய் மேற்கைச் சேர்ந்த வல்லிபுரம் சிவயோகநாதன் கடந்த ஆண்டு இறுதியில் யாழ். மாவட்ட நீதிமன்ற நீதிபதி இ. த. விக்னராஜா முன்னிலையில் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் யாழ். சனசரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தின் பழைய மாணவனும் யாழ்ப்பாணம் தேசிய வீடமைப்புத் திணைக்களத்தின் முன்னாள் பிரதம எழுதுவினைஞருமாவார்.

மும்மொழி ஆற்றல் வாய்ந்த இவர் நட்டஈடுப் பொறிப்பாளராகவும் மானிப்பாய் லயன்ஸ் வட்டப்பிரதிநிதியாகவும் மானிப்பாய் சுதாதார சமூக சுற்றாடல் விவகாரசபை உபசெயலாளராகவும் மானிப்பாய் மேற்கு திருவள்ளுவர் ச. ச நிலையத் தலைவராகவும் மானிப்பாய் வடக்கு கிராம முன்னேற்றச் சங்கம், விவசாய சம்மேளனம் ஆகியவற்றின் பிரதிநிதியாகவும் விளங்குகிறார். (க—90)

★ ★ ★ ★ ★ ★

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சினால் நடத்தப்பட்ட 21 ஆம் 'நூற்றாண்டில் கணனி' எனும் திறந்த ஓவியப் போட்டியில் மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை ஆசிரியர் க. ரட்ணேஸ்வரன் (மானியூர் ரட்ணேஸ்) இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவர் சஞ்சீவியின் 'மௌன மொழி' பகுதிக்கு கருத்தோவியங்களை வரைந்து வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

★ ★ ★ ★ ★ ★

வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரி உபபீடாதிபதி திருநாவுக்கரசு கமலநாதன் யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரியின் முதலாவது பீடாதிபதியாக நியமனம் பெறுகின்றார். நல்லூர் நாயன்மார்கட்டில் 1946 இல் பிறந்து அல்வூர் மகேஸ்வரி வித்தியாலயம் மற்றும் யாழ்.இந்துக் கல்லூரியில் கல்வி பயின்று பேராதனைப் பல்கலைக்கழக கலைப் பட்டதாரி ஆனார். கொழும்புப் பல்கலைக்கழகத்தில் கல்வியியல் டிப்ளோமா பட்டமும் யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வியியல் முதுமாணிப் பட்டமும் பெற்றதோடு — கலாநிதிப் பட்டத்துக்காக 'சமூக விஞ்ஞானங்களின் ஒன்றிணைப்பும் இலங்கை சமூகக் கல்வி கலைத் திட்டத்தின் அமைப்பும்' எனும் தலைப்பில் ஆய்வேட்டையும் சமர்ப்பித்துள்ளார்.

கல்முனை சாஹிராக் கல்லூரி, பண்டாரவளை சென் ஜோசப் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி ஆகியவற்றில் ஆசிரியராகவும், யாழ். கல்வித் திணைக்கள சமூகக்கல்வி ஆசிரிய ஆலோசகராகவும் தேசிய கல்வி நிறுவக யாழ். பிராந்திய சிரேஷ்ட விரிவுரையாளராகவும் கோப்பாய் ஆசிரிய கலாசாலை, மட்டக்களப்பு கல்வியியல் கல்லூரி என்பனவற்றின் விரிவுரையாளராகவும் கடமையாற்றிய கமலநாதன் அவர்கள் இலக்கிய மற்றும் பாடநூல் எழுத்தாளரும்கலைஞரும் ஆவார்.

பேராசிரியர் வித்தியானந்தனின் வாலிவதை கூத்தில் பங்கேற்றதோடு பேராசிரியர் பற்றிய 'பல்கலை வித்தகர்' நூலையும் எழுதியுள்ளார். அத்தோடு 'வித்தகர் வித்தி நினைவு மலர்' மற்றும் 'சொக்கன்மணி விழாமலர் ஆகியவற்றின் இணை ஆசிரியராகவும் பணி ஆற்றியதோடு 'கொடுத்த பேரரசு' நாடக எழுத்தாளராகவும், 'பரபக்கத்துக்கு ஒரு சாத்தனார்' 'பாஞ்சாலி இலட்சிய நிறைவேற்றுப் பத்திரம்' முதலிய இலக்கியக் கட்டுரைகளை எழுதிய ஆசிரியராகவும் மிளிர்ந்துள்ளார்.

'மகாவலிப் பிரதேசங்களில் ஒரு கல்விச் சுற்றுலா எனும் இவரது கட்டுரை தினகரனில் 1989 இல் தொடராக வெளி வந்தது. இலகு சமூகக்கல்வி (10, 11) எனும் பாட நூலின் இணை ஆசிரியராகவும் இலகு சமூகக்கல்வி (7) இன் ஆசிரியராகவும் இருந்து பல்வேறு சமய, சமூகப் பணிகளை இவர் ஆற்றியுள்ளார்.

★ ★ ★ ★ ★ ★

தேசிய கல்வி நிறுவகத்தினால் நடத்தப்படும் பட்டப்பின் கல்வி முகாமைத்துவ டிப்ளோமா பாட நெறியில் தென்மராட்சி கல்வி வலய கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார், சாவகச்சேரி கோட்ட பிரதிக்கல்விப்பணிப்பாளர் ந. சத்தியநாதன் ஆகியோர் விசேட தரத்தில் திறமைச் சித்தி பெற்றுள்ளனர். (ஐ-133)

★ ★ ★ ★ ★

வடமராட்சி, ஏப்ரல் 2

பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கத் தலைவராக மூத்த சட்டத்தரணி ஆர். உருத்திரா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

செயலாளராக சட்டத்தரணி பொ. குமாரசாமியும் பொருளாளராக சட்டத்தரணி ஏ. கே. நடராசாவும் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ-173)

★ ★ ★ ★ ★ ★

வலி. தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையில் நீண்ட காலமாக சேவையாற்றிய செலவின எழுதுநர் திருமதி ருக்மணிதேவி திருஞானசம்பந்தர் வலி. வடக்கு பிரதேச சபைக்கு இடமாற்றம் பெற்றுள்ளார். வலி. வடக்கு பிரதேச சபையில் இருந்து இரு எழுதுநர்கள் மானிப்பாய் பிரதேச சபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (ஐ-185)

★ ★ ★ ★ ★ ★

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினரால் 1999 ஆம் ஆண்டு அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட தரம் 12 க்கான சைவசமயபாடப் பரீட்சைப் போட்டியில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மாணவியான இ. அமலோற்பவி இரண்டாம் பரிசாக வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுள்ளார். இவர் சங்கானையைச் சேர்ந்த க. இரத்தினவேல் தம்பதிகளின் புதல்வியாவார்.

மார்ச்26ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். சைவபரிபாலனசபை மண்டபத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவின் போது தீவகக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் இந்தப் பரிசை வழங்கி கௌரவித்துள்ளார். (ஐ-29)

நீங்காத நினைவலைகள்

4 ஆம் ஆண்டு — முதலாம் ஆண்டு



அமரர்
எமடியுஸ் பிளேவியன்
தோற்றம்: 12-02-1915 மறைவு: 20-01-1996

திருமதி
மேரி மெக்டலின் பிளேவியன்
தோற்றம்: 03-04-1916 மறைவு: 02-04-1999

அன்புடன் அரவணைத்து பாசத்தோடு எமை வளர்த்து
ஆண்டவரின் அழைப்பேற்று அவர் இல்லம் சென்றீர்களோ?
இங்கு நாம் உங்களுக்காய் இறைவனிடம் வேண்டுகிறோம்
சன்றெடுத்த பெற்றோரை ஒருகணமும் மறவோமே!

– குடும்பத்தினர்

532, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (74933)

கண்ணீர் அஞ்சலி

அமரர் சுப்பிரமணியம் நவரெத்தினராசா
(வரதன்)
(உழவு இயந்திர சாரதி, வேலணை ப.நோ.கூ.சங்கம்)

அவர்கள் 31-03-2000 அன்று அகால மரணமான செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைகின்றோம். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சுகின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்.

வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
வேலணை.
(75020)

கண்ணீர் அஞ்சலி

உடற்கல்வி கற்கை நெறியைச் சேர்ந்த
இரண்டாம் வருட மாணவி
செல்வி அனுசியா கிருஷ்ணசாமி அவர்களின்
அன்புத் தாயார்
திருமதி தங்கம்மா கிருஷ்ணசாமி
அவர்களின் திடீர் மறைவையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குறிப்பு:- அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொள்ள இருக்கின்ற மாணவர்கள் அனைவரையும் இன்று காலை 8.30 மணிக்கு உடற்கல்வி விரிவுரை மண்டபத்துக்கு வருகை தருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

தலைவர்,
உடற் கல்வி மானவர் மன்றம்.

யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
(75018)

மரண அறிவித்தல்கள்

நடராசா இராசதுரை
(ஓய்வுபெற்ற உப்பளப் பரிசோதகர்)

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட நடராசா இராசதுரை நேற்று (01-04-2000) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா - கனகம்மா தம்பதிகளின் மூத்த மகனும், சங்கரப்பிள்ளை - தாயம்மா தம்பதிகளின் மருமகனும், பத்மாவதியின் அன்புக் கணவரும், ஸ்ரீகாந்தன் (பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, காவலாளி), காலஞ்சென்ற தயாகாந்தன், பிறேமகாந்தன் (கனடா), ஜெயலலிதா (கனடா), ஜெயகாந்தன், ஜீவகாந்தன், பகீரதன் (யா/மல்லாகம் ம.வி. மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயதேவி, சுதாஜினி, இராசேந்திரம் ஆகியோரின் மாமனாரும், நிதுஷன், தினுசா, ஜெயஜெனுபன், ஜெனோஜன், இராஜீபன் ஆகியோரின் பேரனும், திருஞானம், செல்வராணி (ஜேர்மனி), அமரசிங்கம் ஆகியோரின் சகோதரனும் கமலாதேவி, மகாதேவன் (கன்னாகம் ப.நோ.கூ. சங்கம்), விமலாதேவி, பரமேஸ்வரி, இந்திராணி, மகேசதாசன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனனும், காலஞ்சென்ற மகேஸ்வரன், ராணி, ஏ.பி.செல்வராஜா ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (02-04-2000) ஞாயிற்றுக்கிழமை 11.00 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் உசத்தியோடை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
ச.மகாதேவன்
(மைத்துனன்)

மில்லேன்,
ஏழாலை மேற்கு.
(75025)

சங்கரப்பிள்ளை பாலசிங்கம்
(கைதடி கிழக்கு)

கைதடி கிழக்கைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை பாலசிங்கம் நேற்று (01-04-2000) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் சங்கரப்பிள்ளை - சடைப்பிள்ளை தம்பதிகளின் மகனும், புஸ்பலீலாவதியின் அன்புக் கணவரும், டிபர்சன், பாரிசா, கபிர்சன், சனர்சன், சரண்யா ஆகியோரின் அன்புத் தந்தையும், சங்கரப்பிள்ளை - சின்னம்மா தம்பதிகளின் மருமகனும், வரதராசா (நகரசபை, சாவகச்சேரி), இராஜேஸ்வரி, சண்முகராசா, யோகேஸ்வரி, சிறீஸ்கந்தராசா (லண்டன்), புஸ்பராசா (லண்டன்) ஆகியோரின் சகோதரனும், புனிதவதி, காசிநாதர், புவனேஸ்வரி, சந்திரன் (சுவிஸ்), குகந்தவி (லண்டன்), பேரின்பநாயகி (லண்டன்), கனகம்மா (திருநெல்வேலி, கனகாரேடர்ஸ்), கனகராசா, புஸ்பராசா (கைதடி அரச முதியோர் இல்லம்), யோகமலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (02-04-2000) நண்பகல் 12.00 மணிக்கு இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கைதடி ஊற்றன் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச.வரதராசா
(சகோதரன்)

கைதடி கிழக்கு,
கைதடி.
(75022)

பாதுகாவலர் சங்கக் கூட்டம்

வடபகுதியில் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோர் பாதுகாவலர் சங்க நிர்வாகசபைக் கூட்டம் இன்று காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் இராசாவின்தோட்ட வீதியிலுள்ள அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய அலுவலகத்தில் நடைபெறும்.

இந்தக் கூட்டத்தில் சங்கத்தின் சகல உறுப்பினர்களதும் ஆவணக் கோவை வழங்கப்பட இருப்பதால் அனைவரையும் கூட்டத்துக்கு சமூகம் தரும்படி சங்கச் செயலாளர் கேட்டுள்ளார்.

UNIVERSITY OF JAFFNA
SRI LANKA.

FACULTY OF GRADUATE STUDIES

MASTER OF EDUCATION COURSE

Applications will be received by the Faculty of Graduate Studies for the Master of Education Programme upto **28th April, 2000.**

Admission Requirements:

(a) A degree from a recognized University approved by the Senate.

(b) A Postgraduate Diploma in Education.

and

(c) A minimum of two years experience in teaching in a school or other educational experience relevant to the Course.

Duration: **One year**

Lectures will be conducted in evenings and on Saturdays.

Admission:

Admission to the Course will be made on the basis of a written test and/or an interview conducted by the University.

Medium of Instruction:

Tamil.

Course Fee:

Course Fee	**:Rs.20,000/-**
Application fee	**:Rs.100/-**
Registration fee	**:Rs.750/-**
Library fee	**:Rs.750/- per year.**
Library Deposit	**:Rs.1,000/- (Refundable)**

Those who wish to obtain the application forms in person are required to produce a receipt from the People's Bank, University Branch or Shroff, Finance Branch of the University of Jaffna on a payment of Rs. 100/- per form. Those who wish to obtain the forms by post are requested to send a Money Order/ Postal Order for Rs.100/- drawn in favour of Bursar, University of Jaffna together with a self-addressed Rs. 3.50/- stamped envelope of 23 x 10 cm. size.

Completed applications should be submitted to the Dean's Office, *Faculty of Graduate Studies*, University of Jaffna on or before **2000.04.28.**

REGISTRAR,
University of Jaffna,
Jaffna.
(C/11601)

SALE SALE SALE SALE

விரையுங்கள்

'ராம்சில்க்' புடவையகம்

- சேட்ஸ் வகைகள் 250/= முதல் 450/= வரை
- றெடிமெட் ரவுசர் 36-38-39-40 250/=
- கவுண் துணிவகைகள்
- றெடிமெட் கவுண்கள், ஸ்கேட் அன் பிளவ்ஸ்
- சாறி 250/= முதல் 750/= வரை
- ரவுசர் துணிகள் 250/= முதல் 450/= வரை

விரையுங்கள்!

'ராம்சில்க்'
109, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(V.S.B. குறூப் அருகில்)
(75014)

மரண அறிவித்தல்கள்

திருமதி ஆச்சிமுத்து கந்தையா

நுணாவில் கிழக்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமான திருமதி ஆச்சிமுத்து கந்தையா நேற்று (01-04-2000) சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை - தங்கமுத்துவின் அன்பு மகளும் வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்ட வவுனியா கமநல சேவைத் திணைக்கள முன்னாள் பிரதம லிகிதர் தர்மலிங்கம் கந்தையாவின் அன்பு மனைவியும் கனடாவில் வசிப்பவர்களான சிவதர்மன், குகநேசன், சாருமதி, இளங்குமரன், பாருமதி, பானுமதி ஆகியோரின் பாசமிகு தாயாரும் சந்திரா சிவசக்தி, வைகுந்தவாசன் ஆகியோரின் அன்பு மாமியும் கந்தவனம் (முன்னாள் இ.போ.ச. சாரதி), வைத்திலிங்கம் (முன்னாள் நிலஅளவைத் திணைக்கள உத்தியோகத்தர்), திருமதி செல்லம்மா ஆறுமுகம், திருமதி அன்னமுத்து கதிர்காமர், திருமதி கமலாதேவி சதாசிவம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் திருமதி லட்சுமி குலசேகரம்பிள்ளை, திருமதி நாகேஸ்வரி சிவராஜா, திருமதி பூபதி நவரட்ணம், இராஜரட்ணம் (பணிப்பாளர், உயர்தொழில்நுட்ப நிறுவனம்), இராமச்சந்திரா (உரிமையாளர், New Peoples Trade & Suppliers Col.11), திருமதி திலகம் பாலகுமார் (ஆசிரியை, C/பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02-04-2000)ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கந்தவனம் (சகோதரன்)
நுணாவில், சாவகச்சேரி
இராஜரட்ணம் (மைத்துனர்)
8, சங்கிலியன் வீதி, நல்லூர்.
(75012)

சின்னத்தம்பி பொன்னையா

புலோப்பளையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பொன்னையா நேற்று (01-04-2000) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் தங்கம்மாவின் அன்புக் கணவரும், அழகரத்தினம், பரமசாமி, தியாகராசா (கனடா), சாந்தமலர் (கனடா), யோகநாதன் (அமெரிக்கா), சறோசாதேவி (கொழும்பு), விஜயரத்தினம் (கனடா), கனகலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், பத்மாவதி, அரியதேவி, வேலையா (கனடா), இராஜேஸ்வரி (கனடா), செல்வபாக்கியம் (கனடா), தர்மலிங்கம் (கொழும்பு), மனோரஞ்சினி (கனடா), புஸ்பா (கனடா) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03-04-2000) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் இல.61/2, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநெல்வேலி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்,
பொ. அழகரத்தினம் (மகன்)
பொ. பரமசாமி (மகன்)
பொ. விஜயரத்தினம் (மகன்)

61/2, இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி.
(75013)

ஏரம்பு தம்பு

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும்,தற்பொழுது கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட ஏரம்பு தம்பு அவர்கள் நேற்றுமுன்தினம் (31.03.2000) வெள்ளிக்கிழமை இரவு கொழும்பில் காலமானார்.

அன்னார் புங்குடுதீவு முன்னாள் கிராமசபை உபதலைவரும், முன்னாள் ப.நோ.கூ.சங்க முகாமையாளரும், யாழ்ப்பாணம் "சிவதொண்டன் நிலைய" நீண்டகால அறங்காவலரும்,நிர்வாகியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நேற்று (01-04-2000) சனிக்கிழமை கொழும்பில் நடைபெற்றது

தகவல்:
திருமதி.நமசிவாயம் பரமேஸ்வரி
வி.ஆர்.கே.இரத்தினசபாபதி (ஜே.பி.)

G.P.S ரோட்,
கல்வியங்காடு
(75017)

மத்தியாஸ் இராசேந்திரம்

தாளையடி கடற்கரை வீதியைச் சேர்ந்த மத்தியாஸ் இராசேந்திரம் 28-03-2000 அன்று அகால மரணமானார்.

அன்னார் செமாலையம்மா பாக்கியத்தின் அன்புக் கணவரும், தவம், மலர், தேவதாசன் (சுவிஸ்), ராஜி, ஞானசோதி (இத்தாலி), குயின் செல்வி, தாஸ் (லண்டன்), டென்சன், செல்டன் ஆகியோரின் அன்புத் தந்தையும், அம்புறோஸ், செல்லையா, தங்கம், மரியதாஸ், ஆகியோரின் அன்புச் சகோதரனும், அன்றன் அல்மோ (இத்தாலி), அரியம் (சின்னத்தம்பி மெக்கானிக்), எலியாஸ், சுமித்திரா (சுவிஸ்), ஜெயிலா (இத்தாலி) ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் 29-03-2000 அன்று தாளையடியில் நடைபெற்றது. அவரது நினைவு ஆராதனை 19/1, ஈச்சமோட்டை கடற்கரை வீதியிலுள்ள மெக்கானிக் சின்னத்தம்பியின் இல்லத்தில் இன்று (02-04-2000) ஞாயிறு பிற்பகல் 4 மணிக்கு (பு.நே.) நடைபெறும். உறவினர் நண்பர்களை இதில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
மெக்கானிக் சின்னத்தம்பி
(மருமகன்)

19/1, ஈச்சமோட்டை,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.
(75024)

திருமதி பவுலீனப்பு அன்னம்மா

யாழ்ப்பாணம் அடப்பன் வீதியைச் சேர்ந்த திருமதி பவுலீனப்பு அன்னம்மா 31-03-2000 அன்று காலமானார்.

அன்னார் பவுலீனப்புவின் அன்பு மனைவியும், றெஜினோல்டின் அன்புத் தாயாரும், ஜனனி, டயாசியின் பேர்த்தியும், காலஞ்சென்ற பெனடிற், பெர்ணதேத் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (02-04-2000) ஞாயிறு காலை 10 மணிக்கு (பு.நே.) அன்னாரின் இல்லத்திலிருந்து நல்லடக்கத்துக்காக புனித மரியன்னை சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
பவுலீனப்பு
(கணவர்)

3/1, அடப்பன் வீதி,
யாழ்ப்பாணம்.
(75023)

மருதங்கேணிப் பகுதியில் குண்டுவீச்சில் இருவர் பலி

வவுனியா, ஏப்.2

மருதங்கேணியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சினால் இருவர் உடல் சிதறிப் பலியானார்கள்.

இதே இடத்தைச் சேர்ந்த எஸ். பரஞ்சோதி (வயது 21), எஸ். அசோக் (வயது 21) ஆகியோரே கொல்லப்பட்டவர்கள் ஆவர்.

கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபொழுது இவர்கள் மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

குடாக்கடலில் மீன் பிடிக்க மீனவருக்கு அனுமதி மறுப்பு

குருநகர்,ஏப்.2

யாழ். குடாக்கடலில் மீன் பிடிக்க குருநகர் மீனவர்கள் நேற்றையதினம் படையினரால் அனுமதிக்கப்பட வில்லை.

நேற்றுக் காலை வழமைபோல் குருநகர் இறங்குதுறைக்கு மீனவர்கள் சென்ற போதிலும் அங்கிருந்த படையினர் மூன்று நாள்களுக்கு மீன்பிடிக்க அனுமதியில்லை என அறிவித்ததாகவும் அதனைத் தொடர்ந்து மீனவர்கள் தமது இருப்பிடம் திரும்பியதாகவும் குருநகர் மீனவர்கள் தெரிவித்தனர்.

தீவகம் மற்றும் வடமராட்சியிலும் மீன் பிடிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (இ-5-51)

மாபெரும் மலிவு விற்பனை!

சோதி ரெக்ஸ்ரைல்ஸ்

வெளிநாடுகளில் இருந்து வரவழைக்கப்பட்ட சேட், சூட்டிங், ஸ்கேட்டன் பிளவுஸ், சாறிகள் மற்றும் பலவகை துணிவகைகளும் விதவிதமான டிசைன்களில் மனங் குளிரும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள,

1 சாறி 250/=

சோதி ரெக்ஸ்ரைல்ஸ்

மாபெரும் மலிவு விலையில்

4 சாறி 1000 ரூபாவுக்கு 14ஆம் திகதி மட்டுமே!

திருமண வைபவங்களுக்கு ஏற்ற முகூர்த்தப் பட்டுக் கூறைகள், பனாரிஸ் பட்டுவேட்டிகள் என்பவற்றைத் தெரிவு செய்திட இன்றுமுதல் நாடுங்கள்,

சோதி ரெக்ஸ்ரைல்ஸ்
இல.14, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
T.P: 2139

(75008)

JAFFNA SCIENCE ASSOCIATION

8th Annual Sessions
5, 6 & 7 April 2000.

Venue: Library Auditorium,
University of Jaffna.

First day Sessions (05-04-2000)

9.00 hr. Inauguration address: Prof. V.Arumugam.
10.15 hr. THEME SEMINAR (bilingual)
"Changing Ecology - Challenges & Solutions"
Contributors: Mr. K.S.Kugathasan, Mr.C.Wijeyaratnam, Mr. G.Mikunthan, Dr. Soosai Anandan and Eng.M.Ramathasan.
13.45 hr. Chairman's address (A): Prof. K.Kandasamy
"Physics To Medical Science"
14.45 hr. Review Lecture: Dr. Ms. C.Bavani
"Criminal Abortion"
15.30 hr. Chairman's address (B):
Prof. Ms. V.Arasaratnam
"DNA Finger Printing in Forensic Medicine"

Second day Sessions (06-04-2000)

14.45 hr. Chairman's address (C):
Prof. C.Sivagnanasundram
"Students Research Projects in Medical Sociology"
15.30 hr. Popular Lecture: Mr. V.P.Sivanathan
"யாழ் மாவட்ட உற்பத்தித் துறைகளும் வேலை வாய்ப்பும்"

Third day Sessions (07-04-2000)

9.00 hr. Chairman's address (D): Prof. K.Sinnathamby
"Learning Through Project - ...."
9.45 hr. Popular Lecture: Eng. M.Ramathasan
"தொழிற்துறை மனப்பாங்கு - ..."
14.00 hr. (Kailasabathy Auditorium) Presidential address
Prof. K.Balasubramaniam
"Genetic Engineering and Gene Therapy"

All are welcome

For the details contact the General Secretary.
Dr. S.Srisatkunarajah
General Secretary.

Compliments:
IBMS Computer Training Centre
701, K.K.S. Road, Jaffna.

(C/11585)

பிஸ்ரல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளார்.

கல்வியங்காடு, செம்மணி வீதியில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இவரை அங்குள்ள அம்மன் கோயிலுக்கருகில் வழிமறித்தவர்கள் இவர் மீது பிஸ்ரலால் சுட்டனர் என்று கூறப்படுகின்றது. (இ-5-180-15)

பளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காப்பு நிலையத்தில் கடமையில் இருந்த ஒருவர் பலியானார்.

மாமா என்றழைக்கப்படும் எஸ். செல்லத்துரை (வயது56) என்பவரே பலியானவராவார்.

பளை ஆஸ்பத்திரி சுற்றாடலில் நேற்று முன்தினம் இரவு 7மணி தொடக்கம் 10மணிவரை தொடர்ச்சியாகத் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர். (இ-15-5)

காயமடைந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற கலந்துரையாடலின்போது படையினர் தமது வாகனத்தில் நோயாளர்களை எடுத்துவந்து மிருசுவிலில் வைத்து செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்க இணக்கம் ஏற்பட்டது.

திருமதி திருக்கேதீஸ் ரஞ்சி ராஜேஸ்வரி(வயது30-பளை), செல்வி எஸ்.ரேவதி(வயது20), செல்லத்துரை கமலாசினி(வயது 30 -புலோப்பளை), செல்லையா நந்தகுமார்(வயது 36-புலோப்பளை), பொன்னையா யோகராசா(வயது38) ஆகியோரே காயமடைந்த ஐவரும் ஆவர்.

இவர்களுடன் வந்த ஏனைய ஐந்து பேரும் இவர்களுக்கு உதவியாக வந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த 27 ஆம் திகதி நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் காயமடைந்து பளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த இவர்கள் மேலதிக சிகிச்சைக்காகவே யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டனர். (இ-10-9-15-5)

பஸ் சேதம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெட்டித்துறைக்குச் சென்ற 751 ஆம் இலக்க பஸ்ஸே சேதம் அடைந்த பஸ் ஆகும்.

தமது சேஷ்டைகளுக்காக பஸ்ஸை மறிக்க முற்பட்டபோது பஸ் நிற்காது சென்றதாலேயே இவர்களின் கல்வீச்சுக்கு உள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அப்பகுதிக்கான பஸ் சேவைகள் நேற்று ரத்துச் செய்யப்பட்டன.

இதேவேளை குடாநாட்டின் பல பகுதிகளிலும் நேற்று இளைஞர்களின் ஏப்ரல் முட்டாள் தின சேஷ்டைகள் அதிகரித்துக் காணப்பட்டன.

ஆங்காங்கே வீதியோரங்களில் நின்ற இளைஞர்கள் வீதிகளில் சென்றோர் மீது மை மற்றும் வர்ணத் திரவங்களைத் தெளித்தனர்.

பளைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பள்ளி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பிரதேசங்களிலுள்ள பொதுமக்களை புலோப்பளை, கிளாலி, கச்சாய், வீதிவழியாக வெளியேறுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இதற்காக இன்று (ஞாயிறு) காலை 6 மணிமுதல் பிற்பகல் 2 மணி வரை இப்பாதை மீதான தாக்குதல்களை நிறுத்த ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளோம்.

எனவே இந்த நேரத்தில் பொதுமக்களை பாதுகாப்பாக வெளியே கூட்டிச் செல்ல மனிதாபிமான பணியில் ஈடுபட்டுள்ள அமைப்புகள் உதவவேண்டும் என்று வேண்டுகிறோம்.

இப்படி அந்த அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-6)

கலைப் பட்டதாரியாக

உயர்தரம்
3 பாடங்களில்
சித்தியடைந்துவிட்டீர்களா?
வீட்டிலிருந்து படித்தே
பட்டதாரியாகலாம்

விவரங்களுக்கும்
பாடத்திட்டத்திற்கும
20 ரூபா முத்திரைகளுடன்
தொடர்புகொள்க.

த. பெ. இல. 100,
யாழ்ப்பாணம்.

(74934)

காணாமற்போனோரில்

18 பேரின் உறவினர்கள் விசாரணைக்கு அழைப்பு!

யாழ்ப்பாணம், ஏப்.2

குடாநாட்டில் காணாமற்போனவர்களில் 18 பேரின் உறவினர்கள் இராணுவப் பொலீஸாரால் விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் காணாமற்போன 18 பேரின் பெயர் விவரங்களை இராணுவப் பொலீஸார் யாழ்.செயலகத்துக்கு நேற்று அனுப்பிவைத்தனர்.

எதிர்வரும் 8ஆம், 9ஆம் 10ஆம் திகதிகளில் யாழ்.ஞானம்ஸ் ஹோட்டலில் காலை 9 மணிமுதல் விசாரணை நடைபெறவுள்ளதாகவும் - ஒவ்வொருநாளும் 6 பேர் விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

காணாமற்போனவரதும் விசாரணைக்கு அழைக்கப்பட்டவரினதும் விவரம் வருமாறு :-

8ஆம் திகதி விசாரணை

★ சின்னத்துரை பிரபாகரன்-வசந்தா பூங்கோதை புஸ்பராசா (தாயார்) பழைய தபாற் கந்தோர் ஒழுங்கை, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

★ நெல்லையன் தவராஜா-சின்னவன் நெல்லையன் (தகப்பன்) சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி.

★ காந்தன் அருள்தரன் - காசிப்பிள்ளை சத்தியகுமார் (சாட்சி) ஆரீ வாதப்பர் றோட், அரியாலை.

★ இராஜேந்திரன் கோணேசரூபன் - கந்தையா இராஜேந்திரன் (தகப்பன்) செல்லர் வீதி, நல்லூர்.

★ செல்வரத்தினம் சதீஸ்குமார்-உமாதேவி செல்வரத்தினம் (தாயார்) வைத்தியசாலை வீதி, கோப்பாய்.

★ குணரத்தினம் அருமைராஜா-புனிதமலர் அருமைராஜா (மனைவி) ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

9ஆம் திகதிவிசாரணை

★ நவரத்தினம் ஜோகதீஸன்-அன்னலட்சுமி நவரத்தினம் (தாயார்) செட்டித் தெரு, நல்லூர்.

★ தெய்வேந்திரம் பிரபாகரன்-தெய்வேந்திரம் மனோன்மணி (தாயார்) கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

★ நவரத்தினம் கதிர்காமவேல்-கே.சச்சிதாசன் வைரவர் கோயில், திருநெல்வேலி.

கிருபா (சாட்சி) அம்மன் வீதி, பண்டத்தரிப்பு,எஸ்.சதீஸ்.

★ கிருஷ்ணமணி கௌரிசைலசிறி - கந்தசாமி ரமணி, கந்தசாமி வாணி, கனகன் குணதி (சாட்சி) சுழிபுரம், வைத்தியநாதன் (கிராம சேவகர்)

★ செல்வம் தெய்வேந்திரன்-மகேந்திரன் பரமேஸ்வரி, தொல்புரம்.

★ சண்முகம் சற்குணராஜா-சண்முகம்(தகப்பன்) சுழிபுரம்தெற்கு.

10ஆம் திகத விசாரணை

★ பற்குணசிங்கம் ரஜீந்திரன், நல்லூர்.

★ செல்லையா கந்தசாமி, கோண்டாவில்.

★ துரைசிங்கம் நீதிராஜ் - சூரசிங்கம் பூமா(தாயார்) பழைய பொலீஸ் நிலைய வீதி, ஆனைக்கோட்டை, கண்ணன் (சாட்சி)

★ நாகராசா நகுலேசம் - அருணாச்சலம் லக்ஷ்மிப்பிள்ளை(சாட்சி) சுதுமலை தெற்கு, சாவற்காடு.

★ சுப்பிரமணியம் சுபநேசன் மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

★ சுப்பிரமணியம் பாலவடிவேல் - பாலவடிவேல் விஜிதா (மனைவி) பளை, குணம்(சாட்சி)

முக்கிய அறிவித்தல்

யாழ். பல்கலைக்கழக வணிகத்துறை இறுதி வருட "A", "B" பிரிவு மாணவர்களின் குழுப் புகைப்படங்களை 05-04-2000 புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு எடுப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதால் இறுதி வருட மாணவர்கள் அனைவரையும் பல்கலைக்கழகத்திற்கு சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

செயலாளர்,
வணிக மாணவர் மன்றம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(75002)

மரண அறிவித்தல்கள்

வல்லிபுரம் கனகசிங்கம்

(இளைப்பாறிய ஆசிரியர்)

கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும், மீசாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் கனகசிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர்) நேற்று (01-04-2000) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தெய்வானைப்பிள்ளையின் அன்புக் கணவரும் தேவராணி (ஆசிரிய கலாசாலை, மட்டக்களப்பு), அருள்மோகன் (சுவிஸ்), ரவிமோகன் (சுவிஸ்), உமராணி ஆகியோரின் அன்புத் தந்தையும் தர்மகுலம் (ஆசிரியர், அல்லக்சா ம.வி கல்பிட்டி), இந்திராணி (சுவிஸ்), சுதாராணி (சுவிஸ்), தவயோகராசா (ஆசிரியர், சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும் அமரர் சிவப்பிரகாசம், அமரர் இரத்தினசிங்கம், சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் யோககுலராணி, அஞ்சலிக்கா, அனோஜன், றொபின், சஜித்தா, அபிநயா, அபிவர்ணா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மீசாலை கிழக்கு இல்லத்தில் நேற்று (01-04-2000) சனிக்கிழமை நடைபெற்று கொற்புலவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.தவயோகராசா
(மருமகன்)

(C/11620)

துரைச்சாமி செல்வநாதன்

(C.G.R. கொழும்பு புகையிரதத் திணைக்களம்)

கொழும்பைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட து.செல்வநாதன் கொழும்பில் அகால மரணமானார்.

இவர் காலஞ்சென்ற ரி.துரைச்சாமி (புகையிரத சாரதி) - அன்னலட்சுமி ஆகியோரின் அன்பு மகனும் சறோஜினிதேவியின் அன்புக் கணவரும் செ.பார்கவியின் (மாணவி, மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயம்) அன்புத் தந்தையும் து.யோகநாதன் (இ.போ.ச.கொழும்பு), து.கீர்த்திநாதன் (புகையிரத திணைக்களம், வவுனியா), து.ஜீவநாதன் (உதவி காணி ஆணையாளர், கொழும்பு), து.கனகாம்பிகை, து.லலிதாம்பிகை ஆகியோரின் சகோதரனும் மூ.சண்முகம், ச.செல்லம்மா ஆகியோரின் மருமகனும் ஆவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.04.2000) ஞாயிற்றுக் கிழமை பி.ப.4.00 மணிக்கு கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சறோஜினிதேவி
(மனைவி)

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(C/11621)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி,- 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02-04-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.